பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை 03.06.2025 கதிர் 206

## இது ரகசியம் அல்ல!

தமிழ் தேசியப் பேரவையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் நேற்றுத் தமக்கிடையில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. தாங்கள் இன நலனை ☞ 2

# செம்மணிப் புதைகுழியில் சிறுமியின் எலும்பு எச்சம்

## இதுவரை 17 பேரின் எலும்புகள் கண்டுபிடிப்பு

யாழ்.செம்மணி,சிந்துப்பாத்திமயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதை குழியில் நேற்று வரை 7 பேரினது என்று கருதப்படும் எலும்பு எச்சங்கள் கண்பிடிக் கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் இன்னும் அதிகமான மனிதனர்களின் எலும்பு எச்சங்கள்காணப்படுவதற்கானவாய்ப்புகள் இருப்பதாகஅகழ்வுப்பணிகளில்ஈடுபட்டுள்ள நிபுணர்கள் கருதுகின்றனர்.

அரியாலை,செம்மணிசித்துப்பாத்திஇந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிக்காக் குழி தோண்டப்பட்டபோது மனித எச்சங்கள் வந்ததைத் தொடர்ந்து அது நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் தொடங்கப்பட்டன.

இந்தப் புதைகுழியில் இருந்து நேற்று வரை 7 பேரினுடையவையாக இருக்கக்கூடும் என்று கருதப்படும் எலும்பு எச்சங்கள்கண்டெடுக்கப்பட்டுள்ளன.அகழ்வு நியமங்களுக்கு ஏற்ப அவை புதைகுழியில் இருந்து அகற்றப்பட்டு வருகின்றன. அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற குழியில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்ட ☞ 2

## லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் கைது

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இன்று கைது செய்யப்பட்ட தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொழும்பு நீதிவான் ☞ 8

## 323 கொள்கலன் விடுவிப்பு குறித்து பிவிதுறு உறுமய கட்சி முறையீடு

முறையான பரிசோதனைகள் ஏதுமின்றி சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்களை விடுவிப்பதற்கு கப்பற்றுறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க வழங்கிய பணிப்பு குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளது.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சிரந்த ஜயலத் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இது தொடர்பாக நேற்று முறைப்பாடு அளித்தார். அவர் அதன் ☞ 2

# மருந்துத் தட்டுப்பாடு நிலவுகையில் கொவிட் பரவலும் தீவிரமடைகிறது

## சமாளிக்க ஆளும்தரப்பிடம் திட்டமில்லை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கிடையில், கொவிட் புதிய திரிபும் பரவி வருகிறது. இந்த நிலைமையை சமாளிப்பதற்கு ஆளும்தரப்பிடம் எந்த முன்னாயத்த வேலைத்திட்டங்களும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டுள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

தற்போது நாட்டில் பல்வேறு மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவில் 180 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. வைத்தியசாலை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவற்றில், நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களும் உள்ளடங்குகின்றன. இது தொடர்பில் ☞ 8

## 161 சபைகளில் சுபவேளைகளில் நேற்றுக் கன்னி அமர்வு ஆரம்பம்

பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதில் சிக்கல் இல்லாத 161 உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் பெரும்பாலான அதிகார சபைகளின் கன்னி அமர்வு நேற்று திங்கட்கிழமை சுபவேளையில் இடம்பெற்றது. இதன்போது மேயர், பிரதி மேயர் மற்றும் சபை தலைவர்கள், பிரதி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சத்தியபிரமாணம் செய்து கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

பெரும்பான்மையை பெறாத 178 உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் மேயர், பிரதி மேயர், தலைவர் மற்றும் பிரதி தலைவர் ஆகிய பதவிகளுக்கான நியமனங்கள் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் தலையீட்டுடன் இடம்பெறவுள்ளது. இரகசிய வாக்கெடுப்பு அல்லது பகிரங்க வாக்கெடுப்பு ஊடாக இந்த தெரிவுகள் இடம்பெறும்.

339 உள்ளூராட்சிமன்றங்களுக்கான வாக்கெடுப்பு 2025.05.06 ஆம் திகதியன்று நடைபெற்றது. ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி 265 உள்ளூராட்சிமன்றங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 36 உள்ளூராட்சிமன்றங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 14 உள்ளூராட்சிமன்றங்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 உள்ளூராட்சிமன்றங்களையும் ☞ 8

## வரிப் பணத்தில் ஒரு ரூபா கூட மோசடி செய்யப்படவே மாட்டாது

### அரசுத் தலைவர் அநுர உறுதியளிப்பு

மக்களால் ஆளும்தரப்பிற்கு செலுத்தப்படும் வரிப் பணத்தில் ஒரு ரூபாய் கூட மோசடி செய்யப்படவோ அல்லது வீணாக்கப்படவோ மாட்டாது என்பதற்கான உத்தரவாதத்தை நாட்டுக்கு வழங்குவதாக அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

மேலும், எந்தவொரு ☞ 8

## எரிபொருளால் கிடைக்கும் இலாபம் யார் சட்டைப் பைக்குச் செல்கிறது?

### முன்னாள் எம்.பி. தொலவத்த கேள்வி

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள போதிலும், நமது நாட்டில் எவ்வித விலை திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. அன்று எரிபொருளால் கிடைத்த இலாபம் தேசிய மக்கள் கூறியதைப் போன்று காஞ்சன விஜேசேகரவின் சட்டைப் பைகளுக்குள் சென்றது உண்மையெனில், இன்று அது யாருடைய சட்டைப் பைக்குள் செல்கிறது ☞ 2

### சட்டத்தரணியிடம் வாக்குமூலம் பெறுவதற்கான தடை மீது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிப்பு

சட்டத்தரணி ஒருவரை வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்காக இன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விடுத்த அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை ☞ 2

## யாழ். மாவட்டத்திலுள்ள சபைகளின் தலைவர் தெரிவு திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள 17 சபைகளுக்கும் முதல்வர் அல்லது தவிசாளர்களைத் தெரிவு செய்வதற்கான திகதிகள் உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபை முதல்வர் தேர்வு ஜூன் 13 இடம்பெறவுள்ளது. அதே தினத்தில் நல்லூர் பிரதேச ☞ 8

## காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிதியாக ரூபா 2 இலட்சம்

### கேட்கிறது காணாமற்போனோர் குடும்ப ஒன்றியம்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் பிரதான பங்காளிக்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி வலிந்து காணாமலாக்கப்படல்களால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பாக இருந்தும்கூட, இவ்விவகாரத்தில் ☞ 8

## நாடு திரும்பும் அகதிகளை இனி கௌரவமாக நடத்த நடவடிக்கை

### அயலுறவுத்துறை பிரதி அமைச்சர் அறிவிப்பு

புலம்பெயர் நாடுகளில் வாழும் அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு ஏற்றவாறான தெளிவானதும், நியாயமானதுமான செயன்முறையை உருவாக்குவதற்கும், அவர்கள் கௌரவத்துடன் நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்கும் தமது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என அயலுறவுத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

அதேவேளை அண்மையில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதி கைதுசெய்யப்பட்ட சம்பவம் சட்டத்தின் பிரகாரமும், மனிதாபிமான அடிப்படையிலும் தீர்க்கப்படும் எனவும், இச்சம்பவத்தை குறுகிய அரசியல் சுயலாபங்களுக்காகப் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முன்னிறுத்தியே இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர் என்று அவர்கள் சொன்னாலும் அது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சிய அமைப்பதை மையமாகக் கொண்ட ஓர் அரசியல் இணைவுதான் என்பதை அவர்களது பதில்களே நேற்று வெளிப்படையாகச்சொல்லிவிட்டன. வடிவேலி பாணியில் சொன்னால் கொண்டையை மறைக்க மறந்துபோனார்கள்.

வடக்கு கிழக்கில் உள்ள சபைகளில் தமிழ் தேசிய அரசியல் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டிருந்தால் அது ஆட்சியமைப்பதற்கு ஆதரவு தரப்படும் என்று கடந்த வாரம் கஜேந்திரகுமார் தாமாக முன்வந்து அறிவித்திருந்தார். தமது தமிழ்த் தேசியப் பேரவை இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். யாரும் கோரிக்கை விடுப்பதற்கு முன்பாகத் தானாகவே அவர் இதனைத் அறிவித்திருந்தார். ஆனால், நேற்று இந்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் தாங்கள் இருவரும் சேர்ந்த ஓர் அணி என்றார். குறிக்கிட்ட சுரேஸ்பிரேமச்சந்திரன், சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் நாம் ஜனநாயக ரீதியாகச் செயற்படுவோம், ஜனநாயகம் என்பது பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் அமையும் என்று தெரிவித்தார். ஆக மொத்தத்தில் உள்ளூராட்சி சபைகளில் இந்த இரு அணியினரும் சேர்ந்து தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தி ஆட்சியைப் பிடிப்பதே நோக்கம். அதை நேரடியாகத் தமிழ் மக்களிடம் சொன்னால் அவர்கள் தமது முகத்தில் காறித் துப்பிவிடுவார்கள் என்பதால், இனத்துக்கான ஒன்றிணைகின்றோம் என்று ஏமாற்றுகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கியபோதும்கூட இவர்கள் இப்படித்தான் ஏமாற்றி வந்துள்ளார்கள். இப்போது முன்னாள் ஈபிடிபி உறுப்பினரான சந்திரகுமாரையும் சேர்த்துக்கொண்டு அதே பாணியில் மக்களை ஏமாற்ற முன்வந்திருக்கிறார்கள்.

அவர்களின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 9 விடயங்களையும் பார்த்தாலேயே அது தெளிவாகத் தெரியும். அவர்கள் காலம் காலமாகச் சொல்லி வந்த விடயங்களைத்தான் மீண்டும் சொல்லியிருக்கிறார். புதிதாக மருந்துக்கூட ஒரு விடயம் கிடையாது. இதுவரையில் 13 குறித்து இதுவரை விடாப்பிடியாக நின்ற தமிழ் காங்கிரஸும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் நேற்றைய ஒப்பந்தத்தில் அமுக்கி வாசித்திருக்கின்றன. இதுவரையில், 13 தீர்வுக்கான ஆரம்பப் புள்ளிகூட இல்லை என்று தெரிவித்து வந்தவர்கள் நேற்றைய ஒப்பந்தத்தில் அது இறுதித் தீர்வோ முழுமையான தீர்வோ அல்ல என்று மட்டுமே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஏனெனில் 13 அப்படியே இருக்கவேண்டும் என்று கேட்கும், 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்என்றுகேட்கும் ஜனநாயகக்கூட்டணியினரைக்கூடச்சேர்த்துக் கொண்டதால் இப்போது, காங்கிரஸிற்கும் முன்னணிக்கும் 13 இறுதியான தீர்வோ, முழுமையான தீர்வோ அல்லவாம். வடக்கு கிழக்கில்வாழும்ஒருஎறும்புகூட இதுவரையில் 13 ஒரு இறுதியானதோ முழுமையானதோ தீர்வு என்று ஏற்றுக்கொண்டதில்லை. நீண்ட காலமாக கொழும்பு ஆளும் தரப்புக்களுடன் சேர்ந்தியங்கிய டக்ளஸ் தேவானந்தாகூட அப்படிக்கூறியதில்லை. அப்படியிருக்கும்போது அதைச் சொல்வதற்கு ஒரு ஒப்பந்தம் தேவையா? யாரை ஏமாற்றுகிறார்கள்?

நேற்றைய ஒப்பந்தக் கூட்டத்தின் பின்னர் பேசிய கஜேந்திரகுமார், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஏற்பட்ட அரசியல் நிலமைகள் தமது அணுகுமுறையில் மாற்றத்தைஏற்படுத்தவேண்டியநிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின என்று தெரிவித்தார். உண்மை அதுவல்ல, நாடாளுமன்றத் தேர்தல் அந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தால் உள்ளூராட்சிசபைத்தேர்தலிலாவது அவர்கள் இந்த இணைப்பை ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால், அப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் அவர்களின் கண்களுக்குத் துரோகிகளாகத் தெரிந்தார்கள். முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் ஜனநாயகக் கூட்டணியினரை தமது தேர்தல் பரப்புரை மேடைகளில் கிழி கிழியென்று கிழித்துத் தொங்க விட்டார். (நேற்று சிரித்துக் கொண்டு நடுவே பொம்மை போன்று பம்மிக்கொண்டு அவர் துரோகிகள், சிங்கள அரசுகளின் முகவர்கள் என்று சொன்ன அதே அரசியல்வாதிகளுடன் வரிசையில் அமர்ந்திருந்தார்) ஆனால், தேர்தலில் மக்கள் தமது ஆணையைத் தமிழ் அரசுக் கட்சிக்கே வழங்கினார்கள். வடக்கு கிழக்கு முழுவதும் வழங்கினார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களின் ஆணை தமிழ் அரசுக் கட்சிக்கே கிடைத்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் மக்களின் ஆணை தமிழ் அரசுக் கட்சிக்கே கிடைத்தது. இனி மாகாண சபைத் தேர்தலிலும் அந்தக் கட்சிக்கே இதை விடப் பெரும்பான்மையாக மக்கள்ஆணைகிடைத்துவிடும்என்கிறஅச்சமே இந்தஇருதரப்புக்களையும்ஒன்றிணைக்கும், அதாவது வரலாற்றுத் துரோகிகளையும் வரலாற்றின் துரோகத்திலிருந்து புனிதர்களாகி வந்தவர்களையும் ஒன்றிணைக்கும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. கஜேந்திரகுமார் இந்த நெருக்கடியை ஏற்படுத்தியது தேசிய மக்கள் சக்திதான் என்று தெரிவித்தாலும் இந்த இரு தரப்பும் சேர்ந்து உண்மையில் கருவறுக்க நினைப்பது தமிழ் அரசுக் கட்சியைத்தான்.

இந்த இரு கட்சிகளும் அதைச் செய்வதற்கு முழு உரித்தும் உடையன. ஏனெனில் அவை தமிழ் அரசுக் கட்சிக்கு எதிர்க் கட்சிகள்தான். அதனால் அரசியல் களத்தில் தமிழ் அரசுக் கட்சியைத் தோற்கடிக்க அவை எந்தவிதமான உத்தியையும் பின்பற்றலாம். அதற்கான முழு சுதந்திரம் அவற்றுக்கு உண்டு. அதற்காகத்தான் அவர்கள் தனித் தனியே கட்சிகளை நடத்துகிறார்கள். ஆனால், அதை மறைத்து, தமிழர் நலனுக்காகத்தான் நாங்கள் இணைகின்றோம் என்று தமிழ் மக்கள் காதுகளில் பூச்சுற்றுவதுதான் சகிக்க முடியாத ஏமாற்று, சதி. தாங்கள் செய்வது என்ன அரசியல் என்பதைக்கூட மக்களிடம் வெளிப்படையாகச் சொல்லத் திராணியற்ற இந்தத் தலைவர்களை தமிழ் மக்கள் நம்பினால் அது அவர்களுக்கே பேரிழப்பு.

இது தமிழ் அரசுக் கட்சிக்கான உண்மையானசோதனைக்களம்.போலியான அரசியல் ஒற்றுமை என்கிற ஏமாற்றுக்குள் தமிழ் மக்களைத் தள்ளிவிடுவதா அல்லது வடக்குகிழக்கு முழுவதும்தமிழ்மக்களுக்குத் தலைமை தாங்கும் தகுதியுடைய ஒரே கட்சி என்பதை நிரூபிப்பதா என்கிற அக்கினிப் பரீட்சை அதற்கு. அது தனித்து தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் நிற்கின்றது. கஜேந்திரகுமாரின்வார்த்தைகளில்சொன்னால், தமிழ்மக்களின்தலைமையிடத்தைதனித்தே சென்றடைவதற்கான நெருக்கடிக்குள் அது இப்போது தள்ளப்பட்டுள்ளது.

அது ஒருபுறமிருக்க இந்த சைக்கிள், சங்கு கூட்டால் தமிழ் அரசுக் கட்சிக்கு உடனடியாக எந்தச் சவாலும் கிடையாது. எனெனில் இந்த இரு அணிகளும் சேர்ந்தாலும், ஒப்பந்தம் செய்தாலும்கூட வடக்கு கிழக்கில் எந்தவொரு சபையிலும் அவற்றுக்கு ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது. யாழ்ப்பாணம் மாநகர சபையில் இந்த இரு அணிகளும் சேர்ந்தால் தமிழ் அரசுக் கட்சியைவிட அவற்றுக்கு 3 ஆசனங்கள் மட்டும் அதிகமாகக் கிடைக்கும். அது அங்கு ஆட்சியமைக்கப் போதுமானது அல்ல. இந்த நிலையில் தான் முன்னிலை பெற்றுள்ள எல்லாச் சபைகளிலும் ஆட்சியைப் பிடிப்பதற்கான முன்மொழிவுகளைச் செய்யும் என்று அறிவித்ததற்கு அமைய தமிழ் அரசுக் கட்சி மாநகர சபையில் தனது வேட்பாளரை நிறுத்தும் அதை எதிர்த்து இப்போது வந்திருக்கும் புதிய கூட்டு (இதற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை, ஆயிரத்தெட்டுப் பெயர்கள் ஏற்கனவே வைத்துவிட்டதால் பெயப் பஞ்சம் வந்துவிட்டதுபோலும்) தனது வேட்பாளரை நிறுத்தினால், யார் ஆட்சியாளர்கள் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தை அவை என்பிபி மற்றும் ஈபிடிபி ஆகியவற்றிடம் கையளிக்கும். ஆக மொத்தத்தில் என்பிபி யாரை ஆதரிக்கிறதோ அந்தத் தரப்பே யாழ். மாநகர சபையில் வெற்றிபெறும்.

தமிழ் அரசுக் கட்சியை ஒரு சபைகளிலும் ஆதரிப்பதில்லை என்று அமைச்சர்கள் பிமல் ரத்நாயக்கவும், சந்திரசேகரனும் பிடிவாதமாக இருக்கும் நிலையிலும், ஏற்கனவே வெளிப்படையாகவே அறிவித்திருக்கும் நிலையிலும்என்பிபியின்ஆதரவுடன்அல்லது ஈபிடிபியின் ஆதரவுடன்தான் (சந்திரகுமாரை கூட்டுக்குள் உள்வாங்கும்போது ஈபிடிபியின் ஆதரவு கசக்குமா என்ன?) சைக்கிள், சங்கு கூட்டு மாநகர சபையில் ஆட்சியைப் பிடிக்க முடியும். ஆக, அவர்கள் யாருக்கு எதிராக தங்கள் கூட்டு என்று சொல்கிறார்களோ அவர்களின்பின்புலத்தில்தான்இயங்குவார்கள். இதைவிடச் சிறப்பாகத் தமிழ் மக்களை எவராலும் ஏமாற்ற முடியாது, ஒருவேளை மாநகர சபையில் என்பிபியின் ஆதரவு தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்தால், அப்படிக் கிடைக்கும் மேயர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறுவது என்பதுதான் கட்சிக்குள் பெரும்பான்மையானோரின் முடிவாக இப்போதே இருக்கிறது. ஆக மொத்தத்தில்புதியஅரசியல்கூட்டுநிலமையை இன்னும் இடியப்பச் சிக்கலாக்கியிருக்கிறதே தவிர எதற்கும் தீர்வைத் தரவில்லை. இது அவர்களுக்கும் தெரியும். இதனால்தான் உள்ளூராட்சி சபைகளை முன்வைத்துத் தமது கூட்டு என்பதை வெளிப்படையாக அறிவிக்காமல் தமிழ் மக்களின் நலனை முன்வைத்துக் கூட்டு என்று, உள்ளூராட்சி சபைகள் அமையும்போது அறிவித்து ஒன்றுக்கும் உதவாத உப்புச் சப்பற்ற ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணிப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக்கூடுகளில் 14 வயது மதிக்கத்தக்க சிறுமியினதுஎன்றுகருதப்படும்எலும்புக்கூடும் காணப்பட்டது.

இந்தப் புதைகுழியில் மேலும் பல மனித எலும்புக்கூடுகள இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள், அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதைகுழியில் காணப்படும் எலும்புக் கூடுகள் ஓர் ஒழுங்கு முறையாகப் புதைக்கப்பட்டிருக்கவில்லை. அள்ளிப்போட்டு மூடப்பட்டிருப்பதற்கான அடையாளங்களே காணப்படுகின்றன. சடலங்கள் ஒன்றன் மீது ஒன்றாக குவிக்கப்பட்ருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மீட்கப்படும் எலும்புகளில் கடுமையாக காயங்கள் மற்றும் அவை நொருங்கிப் போயிருப்பதையும் காண முடிகிறது. கூரிய ஆயுதங்களினால் அல்லது கனமான பொருள்களினால் வெட்டப்பட்டு அல்லது அடிக்கப்பட்டு அவர்கள் உயிரிழந்திருப்பதற்கான சாத்தியங்களை இவை காட்டுகின்றன என்று களப் பணியாளர்களிடமிருந்து அறியமுடிகிறது.

இந்தப் பகுதியில் ஏற்கனவே செம்மணிப் புதைகுழி என்று நன்கு அறியப்பட்ட புதைகுழிகள் இருந்திருக்கின்றன. இலங்கை அரச படையினரால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட தமிழர்கள் செம்மணி வயல்வெளியை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டதாக பாடசாலை மாணவி கிருஷாந்திகொலைவழக்கில்குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்ட கோப்ரல் ராஜபக்ச தெரிவித்ததைஅடுத்துஇந்தப்பகுதிசெம்மணிப் புதைகுழி என்று நன்கு அறியப்பட்டிருந்தது.

செம்மணிப் புதைகுழி வழக்கில் கோப்ரல் ராஜபக்ச அடையாளம் காட்டிய பல இடங்களில் இருந்து சுமார் 15 பேரின் எலும்பு எச்சங்கள் முழுமயாக மீட்கப்பட்டிருந்தன. மேலும் பலரின் எச்சங்கள் பகுதியளவில் மீட்கப்பட்டிருந்தன. செம்மணிப் புதைகுழி தோண்டப்படும்போது கோப்ரல் ராஜபக்சவால் சிந்துப்பாத்திமயானத்தில்அருகிலும்புதைகுழி இருப்பதாக அடையாளம் காட்டப்பட்டது. ஆனால் அப்போது மயானத்தைச் சுற்றிய பகுதிகளில் தோண்டிப் பார்க்கப்பட்டதே தவிர, மயானத்தின் உள்ளே தோண்டிப் பார்க்கப்படவில்லை.

தற்போது சிந்துப் பாத்தி மயானத்தின் உள்பகுதியிலேயே புதிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் செம் மணிப் புதைகுழி வழக்கோடு சேர்ந்ததாக இந்தப் புதிய புதைகுழியும் இருக்குமோ என்கிற சந்தேகம் வலுத்துள்ளது.

## மேன்முறையீட்டு.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழு சமர்ப்பித்தமனுவைபரிசீலித்தபின்னர், ஜூலை 23 ஆம் திகதி வரை இந்த இடைக்கால தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதிபதி முகமது லாபர்தாஹிர்மற்றும்பிரியந்தபெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் உதவிப் பணிப்பாளர் நாயகம் நீதிமன்றத்தில் ஆஜராகி சமர்ப்பணங்களை முன்வைத்து தெரிவித்தாவது, இலஞ்ச ஊழல் விசாரணைஆணைக்குழுமுன்னெடுத்துவரும் விசாரணைகளுக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக சட்டத்திரணி ஒருவருக்கு ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுத்தமை தொடர்பில் நேற்று ஆணைக்குழு அதிகாரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளதாக தெரிவித்தார்.

இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இதுபோன்ற உத்தரவைப் பிறப்பிக்க நீதவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், முறையான அதிகாரம் உள்ள நீதிமன்றம் மட்டுமே இதுபோன்ற உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஷனில் குலரத்ன, இந்த வழக்கைத் தீர்த்து வைப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட சட்டத்தரணியிடம் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஏற்கனவே அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகவும், அதன்படி, மனுவை தள்ளுபடி செய்ய வாய்ப்பு இருப்பதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதப் பிரதி வாதங்களை பரிசீலித்த பின்னர், மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

## எரிபொருளால் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத்சிதொலவத்தகேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை செயதியாளர்கள் மத்தியில் இந்தக் கேள்வியை எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தில் எரிபொருட்களால் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதி அப்போதைய அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் சட்டைப் பைகளுக்குள் செல்வதாக தேசிய மக்கள் சக்தி குற்றஞ்சுமத்தியது. ஆனால் இன்று உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள போதிலும், இலங்கையில் விலைகளில்எவ்விதமாற்றமும்ஏற்படவில்லை. அவ்வாறெனில் இப்போது கிடைக்கும் இலாபம் யாருடைய சட்டைப் பைக்குள் செல்கிறது?

அன்று உண்மையைக் கூறியிருந்தால், இன்று அரசாங்கத்துக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அன்றைய ஆளும்தரப்பில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் தான் இன்றும்இந்தஅரசாங்கத்துக்குஉதவுகின்றனர். அமெரிக்க வரி விதிப்பு தொடர்பான பேச்சு நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவே பங்கேற்கின்றார்.

தமது ஆட்சியில் சிறையிலடைக்கப் படுவார்கள் எனக் கூறிய நிதி அமைச்சின் செயலாளரும், மத்தியவங்கிஆளுனரும்இன்றி இந்த ஆளும்தரப்பால் எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியாது. அன்று கூறிய பொய்களால் தான் இன்று இந்த ஆளும்தரப்பு ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. ஆளும்தரப்பின் அழிவு வெகு தொலைவில் இல்லை என்றார்.

## 323 கொள்கலன் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்செய்தியாளர்களிடம்தெரிவித்ததாவது:

2025.01.18 மற்றும் 19ஆம் திகதிகளில் சுங்கத் திணைக்களத்தில் இருந்து எவ்விதமான பரிசோதனைகளுமின்றி சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு கப்பற்றுறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க பணிப்புரை வழங்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. பரிசோதனைகள் ஏதுமின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் உள்ளடங்கியிருந்த பொருட்களின் விபரத்தை ஆளும்தரப்பு இதுவரையில் வெளிப்படுத்தவில்லை.

இந்த கொள்கலன்களில் ஆயுதம், வெடிப்பொருட்கள் அல்லது தீங்கிழைக்கும் பொருட்கள் இருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக சுங்கத் திணைக்கள தொழிற்சங்கத்தினர் சந்தேகிக்கின்றனர்.

முறையான பரிசோதனைகள் ஏதுமின்றி சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்களை விடுவிப்பதற்கு கப்பற்றுறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க வழங்கிய பணிப்பு சட்டவிரோதமானது. இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளைமேற்கொள்ளுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளோம் என்றார்.

# பலஸ்தீனியர்களின் வேதனையை உணர்வதற்கு பலஸ்தீனியர்களாக இருக்க வேண்டியதில்லை

## நீங்கள் ஒரு மனிதனாக இருந்தால் போதும் என்கிறார் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய

(ஸாகிர்)

பலஸ்தீனியர்களின் வேதனையை உணர்வதற்கு பலஸ்தீனியர்களாகவோ முஸ்லிமாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் ஒரு மனிதனாக இருந்தால் மட்டும் போதும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஷாம் நவாஸ் தலைமையில் நடைபெற்ற ஸ்தாபகர் தின நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் தொடர்ந்து பேசிய கருஜயசூரிய மேலும் கூறியதாவது -

இன்றைய அமர்வு வைபவ ரீதியானதல்ல. அது ஒரு தலைமுறையை அடிப்படையாகக் கொண்டது. நீங்கள் அடுத்த பரம்பரையை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள். ஸ்தாபகர்களது நோக்கினை இன்று நீங்கள் கௌரவப்படுத்தி இருக்கிறீர்கள். அவர்கள் தலைவர்கள் மட்டுமல்ல, அவர்கள் அபாயங்களை எதிர்கொள்பவர்கள். பாலங்களை அமைப்பதற்காக உண்மையை சொல்லுபவர்களாக இருக்கிறார்கள். இனம் என்பது பிறப்பினால் ஏற்பட்ட ஒரு விபத்து. ஆனால், மனிதத்துவம் என்பது ஒரு தீர்மானமாகும்.

எனது வாழ்வில் பல தேசங்களின் தலைவர்கள், கண்ணீர் விடுக்கும் தாய்மார்கள், மதகுருமார்கள், இமாம்கள் மற்றும் எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், ஜனாதிபதிமார்களுடன் பல மேசைகளில் நான் அமர்ந்து பேசி உள்ளேன். எமது சுதந்திரப் போராட்டத்தின் போது முஸ்லிம் தலைவர்கள் காட்டிய நாட்டுப்பற்றும் மற்றும் பொறுமையும் நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

நாட்டைக் கட்டியெழுப்புவற்கு நீங்கள் உதவியது மட்டுமின்றி, எமது தேசிய தலைவரின் அடையாளத்தை வகுப்பதற்கும் நீங்கள் உதவினீர்கள்.

நண்பர்களே, உலகம் இன்று காஸாவினைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. அல்லது பார்க்காதிருக்கின்றது. நாம் உண்மையில் சரியான நேரத்தில் எந்தவொரு தீர்மானமும் எடுக்காமல் மனச்சாட்சியை உருத்திக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். அந்த வேதனையை உணர்வதற்கு நீங்கள் பலஸ்தீனர்களாக அல்லது முஸ்லிமாக இருக்க வேண்டியதில்லை. நீங்கள் ஒரு மனிதனாக இருந்தால் போதும். மிகவும் ஆபத்தானது என்னவென்றால், அழிவு மட்டுமன்றி, பேச வேண்டியவர்கள் பேசாமல் இருப்பதாகும். உலகம் கருணையை இழந்து வருகின்றது. ஒரு சிறிய நாடு என்ற வகையில் இலங்கை எப்போதும் நீதியின் பக்கம் நிலைத்து நிற்கின்றது. நாம் தனியாக இருந்தாலும் எனது குரல் சிறியதாக இருந்தாலும் நாம் கொள்கை உடையவர்களாக இருக்க வேண்டும். கூடியுள்ள இளைஞர்கள் தூரம் என்பதற்காகவோ அல்லது அச்சத்திற்காகவோ அமைதி காக்கக் கூடாது. நான் நாடாளுமன்ற சபாநாயகராகப் பணிபுரியும் போது, பெருமளவு அரசியல் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களை மற்றும் காட்டிக்கொடுப்புகளை எதிர்கொண்டேன்.

ஆனால், அரசியல் யாப்பினை உறுதியாகக் கடைப்பிடித்தேன். வசதிக்காக அன்றி கட்சிக்கப்பால் நாட்டையே நான் தெரிவு செய்தேன். நான் பொதுவாழ்வில் இருந்து விடைபெற்ற பின் எமது ஜனநாயகத்தில் மிகவும் குழப்பமான நேரத்தில் தான் தலைமை தாங்கினேன். தலைமை தாங்குவேன் என நினைத்துப்



பார்க்கவும் இல்லை. நீங்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களை வாழ்வில் எதிர்கொள்வீர்கள். உங்கள் வாழ்வில் உங்கள் செயற்பாடுகளை நீங்கள் வசதி அல்லது மனசாட்சியைத் தெரிவு செய்யக் கிடைத்தால் மனச்சாட்சியைத் தெரிவு செய்யுங்கள். நான் இளைஞராக இருக்கும் போது 1965 ஆம் ஆண்டு நாட்டில் குழப்பநிலை உருவானபோது இராணுவத்தில் இணைந்தேன். அதிலிருந்து 40 ஆண்டுகள் பொதுவாழ்வில் பணிபுரிந்தேன். நேர்மையாகச் செயற்படுவது போன்று உயர்வானது ஒன்றுமே இல்லை. இளம் தலைவர்கள் எழுச்சியைக் காண்பது பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. நெருக்கடியான இக்காலத்தில் ஐக்கியமாக இருப்பதே பலமாகும். ஒரு வெறுப்பினை வெறுப்பாலன்றி அன்பாலே வெல்ல முடியும். உயிரை யார் பாதுகாத்தாலும் அது மனிதத்துவத்தை பாதுகாப்பது என்பதாகும் என இஸ்லாம் கூறுகின்றது. யாரொருவர் ஒருவருடைய உயிரைப் பாதுகாக்கின்றாரோ அவர் சக மனிதத்துவத்தைப் பாதுகாக்கின்றது என அல்குர்ஆன் கூறுகின்றது.

இது சமயப் போதனை மட்டுமல்ல, மனிதப் பெறுமானத்தை உணர்த்துகின்றது. நாம் நாட்டை ஒன்றாகக் கட்டியெழுப்புவதற்காகவே அடிப்படையான நான் இதனைப் படித்துள்ளேன். எமது அரசியல் வேறுபாடுகளை விட நமது பொது மனிதத்துவம் கூடுதலான புனிதத்துவம் மிக்கது. இலங்கையர்களான எமக்கு துன்புறுத்தல் எது என்பதும் இலகுபடுத்தல் எது என்பதுவும் தெரிந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு அரசியல்வாதியாக அன்றி ஒரு தந்தையாகவே எனது அனேக செயற்பாடுகளை நான் முன்னெடுத்தேன். முஸ்லிம் தலைவர்கள் காட்டிய மேலதிக இணக்கப்பாடு இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

# வேலையில்லா பட்டதாரிகள் திருமலையில் போராட்டம்!

கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் நேற்றைய தினம் (திங்கட்கிழமை) திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போட்டி பரீட்சை நியமனம் வழங்கக்கோரியும், கிழக்கு மாகாண பட்டதாரிகள் அரச நியமனங்களில் புறக்கணிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன் போது பேச்சு போதும் தொழிலை தா?,அரச சேவையில் கிழக்கு மாகாணத்தை புறக்கணிப்பது ஏன், பரீட்சை வேண்டாம் தகுதிகான் அடிப்படையில் வேலை வழங்கு போன்ற பல பதாகைகளை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.







# வவுணதீவில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியால் சுட்டதில் நபர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கன்னங்குடா கிராமத்தில் நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

நீர் இணைப்பு - குடிநீர் பிரச்சினை காரணமாக இடம்பெற்ற வாக்குவாதத்தில் துப்பாக்கிதாரி தன்னிடம் இருந்த உள்ளூர் தயாரிப்பான கட்டு துப்பாக்கியால் சுட்டதில் நபர் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கி சூடு நடத்தியதாக கருதப்படும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அகதிகளாக மதிக்காத அரசு – ஆளுமைதானா இது?

இந்தியாவில் இருந்து தாமாக முன்வந்து நாடு திரும்பிய அகதியை இலங்கை அரசு கைது செய்து விளக்கமறியலில் வைத்திருப்பது மனிதாபிமானத்துக்கும், அரசியல் நாகரிகத்துக்கும் எதிரானது. ஆளும்தரப்பில் ஒருவர் இந்த நடவடிக்கைக்கு 'சட்டம் தான் காரணம்' என்று விளக்கம் அளிக்க, மற்றொருவர் 'இதுபோல இனி நடக்காமல் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்' என நம்பிக்கையூட்டுகிறார். அந்த இருவரும் அமைச்சர்களில் ஒருவர்தான் விமல் ரத்நாயக்க. இன்னொருவர் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத். ஆனால் அவர்கள் உரைகளிலே வெளிப்படுவது, அரசின் கோரமான இருமுகம் மட்டுமே.

ஐக்கியநாடுகள்அகதிகளுக்கானதூதரகத்தின்(UNHCR) அனுசரணையுடன், தங்களின் வாழ்க்கையை சீரமைக்கத் தாயகம் திரும்பும் அகதிகளை வரவேற்கின்ற ஒரு நாகரிக உலகம்உள்ளது. இலங்கையின்முந்தையஆட்சிகாலங்களில், இதே வழியாக நாடு திரும்பியவர்கள் கைதுசெய்யப்படவோ, நீதிமன்றங்களுக்கு இழுத்துச் செல்லப்படவோ இல்லை. இன்று மட்டும் எங்கிருந்து இந்தச் சட்டங்கள் வந்தன? சட்டங்கள் அப்போது அமல்படுத்தப்படவில்லை. ஆனால் இப்போதுஅதேசட்டங்களைஅதிகாரிகள்தயக்கமேதுமின்றிப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் சட்டங்கள் வழக்கமான சட்டங்களா? அரசியல் பிரதிநிதிகளின் ஆசைமனத்தின் அடிப்படையிலானதா? அல்லது, விமல் ரத்நாயக்க மற்றும் அவரது மனப்பான்மையை பிரதிபலிக்கும் நெறிமுறைகளா?

இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாடு, அகதிகள் மீதான ஒரு ஆணவக் காட்சியாகவே தெரிகிறது. தமது அடிப்படை உரிமைகளைவிட்டு நீண்ட நாட்கள் தமது சொந்த இடத்தைவிட்டு வெளியே வாழ வற்புறுத்தப்பட்ட அகதிகள், தாங்களாகவே விரும்பி நாடு திரும்பும் பொழுது, அவர்களை ஒரு குற்றவாளியைப்போல் கைதுசெய்து, அவர்களின் மீதான சட்ட நடவடிக்கைகளை சட்டங்கள் சொல்கின்றன என ஒதுக்கும் நிராகரிப்பு, ஆளும்தரப்பின் அகதிகள் குறித்த கொள்கைகளையே கேள்விக்குள்ளாக்குகின்றன. நிகழ்ந்தது தவறாயின் அதனை ஏற்றுக்கொண்டு சரி செய்யவேண்டுமே தவிர நியாயப்படுத்தக்கூடாது. அமைச்சர்களின் கருத்துக்கள் தவறை நியாப்படுத்தி, தவறிழைத்தவர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதாகவே தெரிகிறது.

பல்வேறு ஆட்சிக் காலங்களில் நடைமுறையிலேயே இல்லாத சட்டங்களை தற்போது மட்டும் உணர்ந்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பது என்பது, அரசின் இரட்டைத் தரநிலையை வெளிக்கொணர்கிறது. அது மட்டுமல்லாது, இதுவே இனிமேலும் நடைமுறைக்கு வராது என்கிற உறுதிமொழி, ஒரு மனிதாபிமான அரசின் அழிவடையும் குரலைப் போலவே இருக்கிறது.

இலங்கை அரசு, அகதிகளை ஒரு பாதுகாப்பற்ற சமூக பிரிவாகவோ, ஏதாவது ஒரு சந்தேகத்திற்குரிய பிரிவாகவோ பார்த்துவிடாமல், அவர்களின் மனித உரிமைகளைப்பேணவேண்டும். நீதியின்பெயரால்நீதியையே நிராகரிக்கும் செயல்கள் நீடிக்கும்போது, அது எதற்காகவும் வழிகாட்டாது; மாறாக, இனமாகவும் நாடாகவும் நாம் எவ்வளவு பிளவடைந்துள்ளோம் என்பதையே உலகுக்கு வெளிக்காட்டும்.

அகதிகளை வணங்காத அரசின் முகத்தை, இந்த சம்பவம் மிகவும் தெளிவாகவே வெளிக்காட்டுகிறது. இது சட்டத்தின் செயல் அல்ல; அரசின் உண்மையான முகமே.

## சிறுவர்கள் புறயிலர் கோழிகளாக வளர்வதைத் தவிர்ப்போம்

துளசி முத்துலிங்கம்
ஆங்கில ஊடகத்துறை

உலகின் பிற பகுதிகளைப் போலவே, யாழ்ப்பாணத்திலும் மக்கள் தொகை குறைந்து வருகின்றது. இதற்கு வேகமான புலம்பெயர்வு ஒரு காரணமாக இருந்தாலும். குழந்தைகள் பிறக்கும் வீதம்குறைந்துவருவதும்முக்கியமானகாரணமாகும். இப்போது யாழ்ப்பாணத்தின் பெற்றோர்கள் குறைந்த குழந்தைகளையே பெறுகிறார்கள். தற்போது யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான குடும்பங்களில் அதிகபட்சமாக இரண்டு குழந்தைகள், பலர் ஒரு குழந்தையுடன் நிறுத்திக் கொள்கிறார்கள். இப்போது குழந்தை இல்லாதவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.



சில ஆண்களும் பெண்களும் திருமணம் செய்யாதும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இங்கு தனிப்பட்டவர்களின் முடிவின்மீதுநான்கேள்விகேட்கவில்லை – இந்தப் பொருளாதார நெருக்கடியில், திருமணம் செய்வதும் ,அதிக குழந்தைகளைப்பெறுவதும்முடியாதுதான், அதனை ஏற்றுக்கொண்டாகவேண்டும்.

ஆனால் ஏற்கனவே பிறந்து வளர்ந்திருக்கும் குழந்தைகளின் நல்வாழ்வு குறித்து யாழ்0ப்பாண கலைஞர்கள் மன்றமும், செயல் திறன் அரங்க இயக்கமும் ஆகிய நாங்கள் கவலைப்படுகிறோம்.

இன்று யாழ்ப்பாணத்தில் பல குடும்பங்களில் ஒற்றைக் குழந்தைக் குடும்பங்களே இருப்பதால், அவர்களைபுறயிலர்கோழிகள்போன்றுவளர்க்கின்ற பெற்றோர்கள் அதிகரித்திருக்கிறார்கள். இவர்களின் அதீத கவனம், கண்காணிப்பு காரணமாக சிறுவர்கள் சுயமாக சிந்தித்து செயற்படும் திறனை இழந்துவருகிறார்கள். இன்று ஒற்றைக்குழந்தைகள் உள்ள குடும்பங்கள் அதிகரித்திருக்கின்றன. அவர்களுக்கு சகோதரர்கள் இல்லை அல்லது அக்கம் பக்கத்தில் விளையாட சகபாடிகள் இல்லை என்ற நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே தற்போதைய யாழ்ப்பாணப்; பெற்றோரின் குழந்தை வளர்ப்பு ஒரு பேரழிவை நோக்கிய பயணமாகவே பார்க்கப்பட வேண்டியது. ஆனால், நாங்கள் எமது இளமைக்காலத்தில் பல உடன்பிறப்புக்களுடன் வளர்ந்தவர்கள். அயலிலும் பலர் விளையாடக்கிடைத்தார்கள். நாங்கள் துடிப்பாகவும் உற்சாகமாகவும் எமது இளமைக்காலத்தில் இருந்திருக்கிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

சிறுவர்கள் பெற்றோர்களின் அதீத கண்காணிப்பால்; அதிகமாக 'இல்லை' என்ற வார்த்தையைக் கேட்கிறார்கள்!. தன் குழந்தை மீது ஆர்வமுள்ள யாழ்ப்பாண பெற்றோருக்கு கூட அந்த வார்த்தையைச் சொல்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

அதாவது,

'இல்லை, நீங்கள் விளையாடச் செல்ல முடியாது.'

'இல்லை, நீங்கள் தூங்க முடியாது, நீங்கள் படிக்க விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டும்.'

'இல்லை, நீங்கள் சோர்வாக இருப்பதால் பாடசாலைக்கு மேலதிகமாக செல்லும் பல டியூஷன் வகுப்புகளில் இருந்து தொடர்ச்சியாக விலக முடியாது.'

'இல்லை, நீங்கள் இயற்கை உலா செல்வதற்கோ அல்லது பொழுதுபோக்குக்காக புத்தகங்களைப் படிக்கவோ முடியாது.'

'இல்லை' நீங்கள் உங்கள் பாடசாலைக்காலத்தில் படிப்பு தவிர்ந்த வேறு ஏதாவது செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது.

படிப்பு, படிப்பு, படிப்பு வெறுமனே படித்தல் மட்டும் முக்கியமாகியிருக்கிறது.

யாழ்ப்பாண பெற்றோர்கள் தங்கள் மோட்டார் சைக்கிள்களில் நீண்ட வரிசையில் நின்று, ஒரு வகுப்பு முடிந்தவுடன் தங்கள் விலைமதிப்பற்ற பிள்ளைகளை அடுத்த வகுப்புக்கு அழைத்துச் செல்லக் காத்திருப்பதைப் பார்க்கும்போது எனக்கு கவலையாக இருக்கும். அங்கு, எவ்வளவு அக்கறை, நேரம் மற்றும் பணம் செலவிடப்படுகிறது – இறுதியில், பாவம் சிறுவர்கள் தங்களுக்காக சிந்திக்கவோ அல்லது எதையும் சுயமாகச் செய்யவோ முடியாமல் தவிக்கின்றனர்.

இதனால்தான் யாழ்ப்பாணக் கலைஞர் மன்றத்தின் நிறுவினர் உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி தேவநாயகம் தேவானந் ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறுவர் மகிழ்களம், சிறுவர் நாடக இரவுநிகழ்ச்சிகளை நடத்துகிறார். இங்கு சிறவர்களின் படைப்பாற்றல்மேம்படுத்தப்படுகின்றது, மகிழ்ச்சியைத் தூண்டுவதற்கான செயற்பாடுகள் நடக்கின்றன, விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன, சமூகமயமாக்கல் நடக்கிறது. மற்றும் சிறுவர்கள் தாமே மகிழ்ந்திருக்க வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அவர்களின் ஆளுமை விருத்தியடைகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறந்த பலவேறு நிகழ்ச்சிகள்நடைபெறுகின்றன. இதற்காகபயிற்றப்பட்ட கலைஞர்கள் உள்ளார்கள். இவர்களோடு சமூக சேவையாளர்கள், நாடகக் கலைஞர்கள் மற்றும் சிறுவர்உளஆற்றுப்படுத்துனர்கள், மனநலப்பராமரிப்பு நிபுணர்களை உள்ளடக்கிய சிறந்த குழுவை அவர் கொண்டுள்ளார்.

இங்கு செல்லும் நான் பெரியவராக இருந்தாலும் அவற்றை இரசிக்கிறோம்.

நான் அடிக்கடி ஒரு பெரியவனாக பார்வையாளனாக அங்கு அமர்ந்திருக்கிறேன், அங்குநடப்பவற்றைஅவதானித்திருக்கிறேன். அங்கு சிறுவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்களைப்பார்த்து பொறாமைப்பட்டிருக்கிறேன், நான் வளரும்போது எனக்கு அத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற வருத்தமும் எனக்கு உண்டு.

நல்லூரில் நடைபெறும் சிறுவர் மகிழ்களம் ஃ நாடக இரவு நிகழ்ச்சி ஒரு அரிய வாழ்நாள் வாய்ப்பு என்று துணிந்து சொல்லலாம். டிக்கெட்டுகளின் விலை ரூ.200 ஆகும், இதனால் குடும்பங்கள் குறைந்த செலவில் இந்த இடத்துக்கு செல்ல முடியும். அதே வேளை இந்தப்பணியில் ஈடுபடும் கலைஞர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகையொன்று கிடைக்கிறது.

ஆனாலும் பல குடும்பங்கள் இந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்திக் கொள்வதில்லை.

சனிக்கிழமை நிகழ்ச்சிக்கு வந்திருந்த சிறுவர்கள் 'தாங்கள் நாடக இரவுகளை விரும்புவதாகவும், ஒவ்வொரு சனிக்கிழமையும் திரும்பி எங்களைக் கூட்டிச் செல்லுங்கள்' என்று பெற்றோரிடம் கெஞ்சுவதாகவும் பெற்றோர்களே தெரிவிக்கின்றனர். ஆனால் சிறுவர்கள் படிக்க வேண்டியிருப்பதால் தவிர்ப்பதாக கூறினர். அவர்கள் டியூஷனுக்குச் செல்ல வேண்டும். அதுவே முக்கியமென்று பெற்றோர்கள் பலர் கருதுகிறார்கள். இருப்பினும் இதன் தார்ப்பரியத்தை உணர்ந்த சில பெற்றோர்கள் ஒழுங்காக தவறாது தமது பிள்ளைகளை இந்தக் களத்திற்கு அழைத்துவருகிறார்கள்.

ஆனால் வாரத்தின் ஒரு நாளில் இந்த மூன்று மணிநேரத்துக்கு சிறுவர்கள் பங்கு கொண்டால் அவர்களில் நிச்சயமாக பயன்பெறுவார்கள். படிப்பு படிப்பு என்று இருந்த நாள்முழுவதிலும் ஓய்வு நேரமும் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் தேவைப்படுகின்றது. ஆனால் பெற்றோர்கள், விளையாட்டு நேரமும் பொழுதுபோக்கும் தேவையற்றதாகக் கருதுகிறார்கள். அவ்வப்போது விருந்தாகப் போகலாம், பயன்படுத்தலாம், ஆனால் ஒவ்வொரு வாரமும் கிரமமான முறையில் செல்ல முடியாது என்று கருதுகின்றார்கள்.

இங்கு நான் யாழ்ப்பாணப்; பெற்றோரிடம் பேச முயற்சித்தேன்; அவர்கள் அனைவரும் படித்த பணிபுரியும் நிபுணர்கள், 21 ஆம் நூற்றாண்டின் வாழ்க்கை மற்றும் வேலைவாய்ப்புத் திறன்களுக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனை, குழுப்பணி, நல்ல

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# சிறுவர்கள் புறயிலர் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

சமூகமயமாக்கல் திறன்கள், முடிவெடுக்கும் திறன்கள், உணர்ச்சி முதிர்ச்சி நிலை மற்றும் புத்திசாலித்தனம் தேவை. இதனை தற்போதைய கல்வி முறைகள் வழங்கமுடியாது திணறுகின்றன. இங்கு நடைபெறும் மனப்பாடம் செய்தல், சொல்வதை மீள ஒப்புவித்தல் போன்றன வாழ்க்கைக்கு தேவையான திறன்கள் எதையும் வழங்கவில்லை. தோல்வியடைந்த முறைகளையே தொடர்கிறோம். ஆனால் பெற்றோர்கள் கேட்கத் தயாராக இல்லை.

ஒருகலாச்சாரத்தையும்ஆழமாகப்பதிந்தகருத்துக்களையும் மாற்றுவது எளிதானது அல்ல.

ஆனாலும் நாங்கள் முயற்சி செய்கிறோம்.

உங்களிடம் ஒரே ஒரு கோரிக்கை மட்டுமே உள்ளது. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிறுவர்கள்; உங்களிடம் இருந்தால் – அல்லது உங்களுக்குத் தெரிந்திருந்தால் – அவர்கள் மீது உங்கள் பரிவு இருந்தால் – ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை சிறுவர் மகிழ்களம், நாடக இரவுகளில் கலந்து கொள்ள அவர்களை ஊக்குவியுங்கள், அவர்களை அங்கு அழைத்துவாருங்கள். ஏனெனில் அவர்கள் பெரியவர்களானதும் இந்த வாய்ப்புக்காக உங்களுக்கு நன்றி கூறுவார்கள். அதே நேரம் அவர்கள் சிறுவர்களாக எப்போதும் நன்றி கூறுவார்கள்.

நல்லூர் சிறுவர் மகிழ்களம், நாடக இரவு நிகழ்ச்சி, இது நம் சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒன்று – அது இன்னும் முழுமையாக உணரபடவில்லை என்றாலும். இந்த அளப்பரிய முயற்சிக்காக செயல்திறன் அரங்க இயக்கம் அதன் இயக்குனர்; கலாநிதி தேவநாயகம் தேவானந்திற்கும் நன்றி சொல்லுவோம்.

எமது சிறுவர்கள் புறயிலர் கோழிகளாக வளர்கிறார்கள்இ அதனைத் தவிர்ப்போம் !

– துளசி முத்துலிங்கம் ஃ ஆங்கில ஊடகத்துறை

உலகின் பிற பகுதிகளைப் போலவே யாழ்ப்பாணத்திலும் மக்கள் தொகை குறைந்து வருகின்றது. இதற்கு வேகமான புலம்பெயர்வு ஒரு காரணமாக இருந்தாலும். குழந்தைகள் பிறக்கும்வீதம்குறைந்துவருவதும்முக்கியமானகாரணமாகும். இப்போது யாழ்ப்பாணத்தின் பெற்றோர்கள் குறைந்த குழந்தைகளையே பெறுகிறார்கள். தற்போது யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான குடும்பங்களில் அதிகபட்சமாக இரண்டு; குழந்தைகள்பலர்ஒருகுழந்தையுடன்நிறுத்திக்கொள்கிறார்கள். இப்போது குழந்தை இல்லாதவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. சில ஆண்களும்; பெண்களும் திருமணம் செய்யாதும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையும் அதிகரித்துவருகின்றது. இங்கு தனிப்பட்டவர்களின் முடிவின் மீது நான் கேள்வி கேட்கவில்லை – இந்த பொருளாதார நெருக்கடியில் திருமணம் செய்வதும் அதிக குழந்தைகளைப் பெறுவதும் முடியாது தான் அதனை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

ஆனால், யாழ்ப்பாண கலைஞர்கள் மன்றமும் செயல் திறன் அரங்க இயக்கமும் ஆகிய நாங்கள்; ஏற்கனவே பிறந்து வளர்ந்திருக்கும் சிறுவர்களின் நல்வாழ்வைப் பற்றி கவலைப்படுகிறோம்.

இன்று யாழ்ப்பாணத்தில் பல குடும்பங்களில் ஒற்றைக் குழந்தைக் குடும்பங்களே இருப்பதால் அவர்களை புறயிலர் கோழிகள் போன்று வளர்க்கின்ற பெற்றோர்கள் அதிகரித்திருக்கிறார்கள். இவர்களின் அதீத கவனம், கண்காணிப்பு காரணமாக சிறுவர்கள் சுயமாகச் சிந்தித்து செயற்படும் திறனை இழந்து வருகிறார்கள். இன்று ஒற்றைக் குழந்தைகள் உள்ள குடும்பங்கள் அதிகரித்திருக்கின்றன. அவர்களுக்கு சகோதரர்கள் இல்லை அல்லது அக்கம் பக்கத்தில் விளையாட சகபாடிகள் இல்லை என்ற நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவேதற்போதையயாழ்ப்பாணப்பெற்றோரின்குழந்தை வளர்ப்பு ஒரு பேரழிவை நோக்கிய பயணமாகவே பார்க்கப்பட வேண்டியது. ஆனால் நாங்கள் எமது இளமைக்காலத்தில் பல உடன்பிறப்புக்களுடன் வளர்ந்தவர்கள். அயலிலும் பலர் விளையாடக்கிடைத்தார்கள். நாங்கள் துடிப்பாகவும் உற்சாகமாகவும் எமது இளமைக் காலத்தில் இருந்திருக்கிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

சிறுவர்கள் பெற்றோர்களின் அதீத கண்காணிப்பால்;





அதிகமாக 'இல்லை' என்ற வார்த்தையைக் கேட்கிறார்கள். தன் குழந்தை மீது ஆர்வமுள்ள யாழ்ப்பாண பெற்றோருக்குக்கூட அந்த வார்த்தையைச் சொல்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

அதாவது

'இல்லை' நீங்கள் விளையாடச் செல்ல முடியாது.'

'இல்லை' நீங்கள் தூங்க முடியாது. நீங்கள் படிக்க விடியற்காலையில் எழுந்திருக்கவேண்டும்.'

'இல்லை' நீங்கள் சோர்வாக இருப்பதால் பாடசாலைக்கு மேலதிகமாகச் செல்லும் பல டியூஷன் வகுப்புகளில் இருந்து தொடர்ச்சியாக விலக முடியாது.

'இல்லை'நீங்கள் இயற்கைஉலாசெல்வதற்கோ அல்லது பொழுதுபோக்குக்காக புத்தகங்களைப் படிக்கவோ முடியாது.'

'இல்லை'நீங்கள்உங்கள்பாடசாலைக்காலத்தில் படிப்பு தவிர்ந்த வேறு ஏதாவது செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது.

படிப்பு.... படிப்பு... படிப்பு... வெறுமனே படித்தல் மட்டும் முக்கியமாகியிருக்கிறது.

யாழ்ப்பாண பெற்றோர்கள் தங்கள் மோட்டார் சைக்கிள்களில் நீண்ட வரிசையில் நின்று, ஒரு வகுப்பு முடிந்தவுடன் தங்கள் விலைமதிப்பற்ற பிள்ளைகளை அடுத்த வகுப்புக்கு அழைத்துச் செல்லக் காத்திருப்பதைப் பார்க்கும்போது எனக்கு கவலையாக இருக்கும். அங்கு, எவ்வளவு அக்கறை, நேரம் மற்றும் பணம் செலவிடப்படுகிறது – இறுதியில், பாவம் சிறுவர்கள் தங்களுக்காக சிந்திக்கவோ அல்லது எதையும் சுயமாகச் செய்யவோ முடியாமல் தவிக்கின்றனர்.

இதனால்தான் யாழ்ப்பாணக் கலைஞர் மன்றத்தின் நிறுவுனர் உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி தேவநாயகம் தேவானந்த் ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறுவர் மகிழ்களம், சிறுவர் நாடக இரவு நிகழ்ச்சிகளை நடத்துகிறார். இங்கு சிறவர்களின் படைப்பாற்றல் மேம்படுத்தப்படுகின்றது. மகிழ்ச்சியைத் தூண்டுவதற்கான செயற்பாடுகள் நடக்கின்றன. விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. சமூகமயமாக்கல் நடக்கிறது. மற்றும் சிறுவர்கள் தாமே மகிழ்ந்திருக்க வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அவர்களின் ஆளுமை விருத்தியடைகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறந்த பலவேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதற்காக பயிற்றப்பட்ட கலைஞர்கள் உள்ளார்கள். இவர்களோடு சமூக சேவையாளர்கள், நாடகக் கலைஞர்கள் மற்றும் சிறுவர் உளஆற்றுப்படுத்துனர்கள், மனநலப்பராமரிப்பு நிபுணர்களை உள்ளடக்கிய சிறந்த குழுவை அவர் கொண்டுள்ளார்.

இங்கு செல்லும் நாம் பெரியவராக இருந்தாலும் அவற்றை இரசிக்கிறோம்.

நான் அடிக்கடி ஒரு பெரியவனாக பார்வையாளனாக அங்கு அமர்ந்திருக்கிறேன். அங்கு நடப்பவற்றை அவதானித்திருக்கிறேன். அங்கு சிறுவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டிருக்கிறேன். நான் வளரும்போது எனக்கு அத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற வருத்தமும் எனக்கு உண்டு.

நல்லூரில்நடைபெறும்சிறுவர்மகிழ்களம்/நாடகஇரவு நிகழ்ச்சி ஓர் அரிய வாழ்நாள் வாய்ப்பு என்று துணிந்து சொல்லலாம். டிக்கெட்டின் விலை ரூ.200. இதனால் குடும்பங்கள் குறைந்த செலவில் இந்த இடத்துக்குச் செல்ல முடியும். அதேவேளை இந்தப் பணியில் ஈடுபடும் கலைஞர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகையொன்று கிடைக்கிறது. ஆனாலும் பல குடும்பங்கள் இந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்திக்கொள்வதில்லை.

சனிக்கிழமை நிகழ்ச்சிக்கு வந்திருந்த சிறுவர்கள் தாங்கள் நாடக இரவுகளை விரும்புகிறார்கள் என்றும் ஒவ்வொரு சனிக்கிழமையும் திரும்பி எங்களைக் கூட்டிச் செல்லுங்கள் என்று பெற்றோரிடம் கெஞ்சுகிறார்கள் எனவும் பெற்றோர்களே தெரிவிக்கின்றனர்.

ஆனால் சிறுவர்கள் படிக்க வேண்டியிருப்பதால் தவிர்க்க வேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர். அவர்கள் டியூஷனுக்குச் செல்லவேண்டும். அதுவே முக்கியமென்று பெற்றோர்கள் பலர் கருதுகிறார்கள். இருப்பினும் இதன் தார்ப்பரியத்தை உணர்ந்த சில பெற்றோர்கள் ஒழுங்காக தவறாது தமது பிள்ளைகளை இந்தக் களத்திற்கு அழைத்துவருகிறார்கள்.

ஆனால் வாரத்தின் ஒரு நாளில் இந்த மூன்று மணிநேரத்துக்கு சிறுவர்கள் பங்குகொண்டால் அவர்கள் நிச்சயமாக பயன்பெறுவார்கள். படிப்பு படிப்பு என்று இருந்த நாள்முழுவதிலும் ஓய்வு நேரமும் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் தேவைப்படுகின்றது. ஆனால் பெற்றோர்கள், விளையாட்டு நேரமும் பொழுதுபோக்கும் தேவையற்றதாகக் கருதுகிறார்கள். அவ்வப்போது விருந்தாகப் போகலாம் பயன்படுத்தலாம், ஆனால் ஒவ்வொரு வாரமும் கிரமமான முறையில் செல்ல முடியாது என்று கருதுகின்றார்கள்.

இங்குநான்யாழ்ப்பாணப்பெற்றோரிடம்பேசமுயற்சித்தேன். அவர்கள் அனைவரும் படித்த பணிபுரியும் நிபுணர்கள், 21ஆம் நூற்றாண்டின் வாழ்க்கை மற்றும் வேலைவாய்ப்புத் திறன்களுக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனை, குழுப்பணி, நல்ல சமூகமயமாக்கல் திறன்கள், முடிவெடுக்கும் திறன்கள், உணர்ச்சி முதிர்ச்சி நிலை மற்றும் புத்திசாலித்தனம் தேவை. இதனை தற்போதைய கல்வி முறைகள் வழங்கமுடியாது திணறுகின்றன. இங்கு நடைபெறும் மனப்பாடம் செய்தல், சொல்வதை மீள ஒப்புவித்தல் போன்றன வாழ்க்கைக்கு





தேவையான திறன்கள் எதையும் வழங்கவில்லை. தோல்வியடைந்த முறைகளையே தொடர்கிறோம். ஆனால் பெற்றோர்கள் கேட்கத் தயாராக இல்லை.

ஒருகலாசாரத்தையும்ஆழமாகப்பதிந்தகருத்துக்களையும் மாற்றுவது எளிதானது அல்ல. ஆனாலும் நாங்கள் முயற்சி செய்கிறோம்.

உங்களிடம் ஒரே ஒரு கோரிக்கை மட்டுமே உள்ளது. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிறுவர்கள் உங்களிடம் இருந்தால் – அல்லது உங்களுக்குத் தெரிந்திருந்தால் – அவர்கள் மீது உங்களுக்குப் பரிவு இருந்தால் – ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை சிறுவர் மகிழ்களம்/நாடக இரவுகளில் கலந்துகொள்ள அவர்களை ஊக்குவியுங்கள். அவர்களை அங்கு அழைத்து வாருங்கள். ஏனெனில் அவர்கள் பெரியவர்களானதும் இந்த வாய்ப்புக்காக உங்களுக்கு நன்றி கூறுவார்கள். அதேநேரம் அவர்கள் சிறுவர்களாக எப்போதும் நன்றி கூறுவார்கள்.

நல்லூர் சிறுவர் மகிழ்களம், நாடக இரவு நிகழ்ச்சி, இது நம் சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒன்று – அது இன்னும் முழுமையாக உணரபடவில்லை என்றாலும். இந்த அளப்பரிய முயற்சிக்காக செயல்திறன் அரங்க இயக்கம் அதன் இயக்குனர் கலாநிதி தேவநாயகம் தேவானந்திற்கும் நன்றி சொல்லுவோம்.

# வடக்கு கிழக்கில் காணி அபகரிப்பு மற்றும் இந்து ஆலயங்கள் மீதான அடக்குமுறையைக் கண்டித்து கவனவீர்ப்பு போராட்டம்

(ஹஸ்பர்)

வடக்கு கிழக்கில் மக்களின் காணி அபகரிப்பு மற்றும் இந்து ஆலயங்கள் மீதான அடக்குமுறையினைக் கண்டித்து நேற்று (திங்கட்கிழமை) மாலை திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இதனை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்ததுடன் கோயில் நிலங்களை அபகரிக்காதே, பறிக்காதே பறிக்காதே வாழ்வாதார நிலங்களை பறிக்காதே, அரசே சைவமத வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்து, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் உள்ளிட்ட பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.




ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பது இந்த நாட்டின் சாபக்கேடு.

நீண்டகாலமாக சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழ்களின் காணி அபகரிப்பு, சைவத் தமிழரின் தலங்களை அழித்தல், நாடுமுழுவதும் இருக்கும் தமிழர் தொல்லியல் சின்னங்களை அழித்தல் மற்றும் உருமாற்றம் செய்தல், இந்துக்களின் கோயில்களின் வழிபாடுகளைத் சட்டத்திற்கு முரணானவகையில் தடுத்தல் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்தல் எனும் அத்துமீறல்கள் தொடர்கதையாகவே செல்கின்றது.

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம் எனக்கூறிப் பெரும் பிரச்சாரம் செய்துவந்த ஜேவிபி அரசு முன்னைய ஆட்சியாளர்கள் செய்த சட்டவிரோதப் பணிகளையே இன்னும் தொடர்ந்து வருகின்றது.

குறிப்பாக இந்த ஆட்சியாளர்களின் காலத்தில் உகந்தையில் புத்தர்சிலை நிறுவுதல் ஓர் இன மத விரோதச் செயலாகும்.

அத்துடன் நீண்டநாளாக தொடரும் சமய வழிபாட்டுத்தலங்களின் பிரச்சினைகளுக்கும் எந்த தீர்வையும் தராது அடாவடியினைச் செய்து வருகின்றது.

கன்னியா சிவனாலய வழிபாட்டு முடக்கம், திருக்கோணேச்சர ஆலய காண்டாமணி நிறுவுவதற்கு அனுமதி மறுப்பு, வெடுக்கு நாறியமலையில் வழிபாட்டுக்குத் தடை, குருந்தூர் மலையில் தடையினை மீறிய புத்தவிகாரை, தையிட்டி சட்டவிரோத விகாரைப் பிணக்கைத் தீர்க்காமை என பலநூறு சமயத் தலங்களின் பட்டியல் நீள்கின்றது.

தொடர்ச்சியாக நடைபெறும் இந்த செயற்பாட்டை கண்டித்து குறித்த கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# கூமாங்குளம் நூலக வீதி 12 மில்லியன் ரூபா நிதியில் திருத்த பணி ஆரம்பமாம்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, கூமாங்குளம், நூலக வீதி 12 மில்லியன் ரூபா நிதியில் திருத்த பணிகள் ஆரம்பித்துள்ளன என தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திருத்த பணிகளை ஆரம்பித்து வைத்த பின் இது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா கூமாங்குளம் நூலக வீதி முழுமையாக தார் இடப்படவுள்ளது. 12 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த வேலைத் திட்டம் வைபக ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்மூலம் கூமாங்குளம் நூலக வீதி கொங்கிறீட் வீதியுடன் இணைக்கப்படவுள்ளது.

பல வருடங்களாக இந்த வீதி திருத்தப்படாமல் இருந்தமையால் மக்கள் சிரமத்தை எதிர் நோக்கி இருந்தார்கள். இதனை தார் வீதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் மக்களிடம் இந்த வீதி கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

100

# மலையக வானவில் பெருமிதம் என்ற தொனிப்பொருளில் ஹற்றனில் பேரணி

(கிஷாந்தன்)

மலையகவானவில்பெருமிதம் என்ற தொனிப்பொருளில் கீழ் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் சமூகத்தின் உரிமைகளைக் கோரி ஞாயிற்றுக்கிழமை ஹற்றனில் பேரணி ஒன்று நடைபெற்றது.

மலையக அறக்கட்டளை என்ற பெயரில் பல அரச சார்பற்றஅமைப்புகள்இணைந்து இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.







ஹற்றன் பஸ் நிலையத்திற்கு அருகில் தொடங்கிய பேரணி, ஹற்றன் டிக்கோயா நகர சபை மண்டபம் வரை சென்றடைந்தது. இதன்போது ஓரினச்சேர்க்கையாளர் சமூகமும் பேரணியில் இணைந்துக் கொண்டதோடு, பல தோட்டத் தொழிலாளர்களும் கலந்துகொண்டு நகர சபை மண்டபத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

# கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை திருமலை மாவட்டத்தில் அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை யாரும் கண்டுகொள்வதில்லை. அதனால் கட்சிகளின் நலனை காட்டிலும் தமிழ் மக்களின் நலனை முதன்மைப்படுத்தி தமிழ் தேசிய கட்சிகள் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டி மக்களின் அத்தியவசிய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்னமோகன் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் -

கசிப்பு உற்பத்தியும் விற்பனையையும் திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே உடனடியாக இவ்விடயத்தில் கவனம் எடுத்து கட்டுப்படுத்தி நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்கையில் ஒளியேற்ற முன்வர வேண்டும் .

திருகோணமலை - உப்புவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட சிறிய கட்டடத்தில் பனை உற்பத்திப் பொருள்கள் மட்டும் விற்பனை செய்வதற்காக வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த பிரதேச மக்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் பணத்தை மட்டும் நோக்காக கொண்டு வேறு மாவட்ட ஒருவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இவைகள் தொடர்பாக உப்புவெளி பிரதே சபையின் ஆட்சியை அதிகாரத்தை எடுத்தவுடன் நீங்கள் நடவடிக்கை எடுப்பிர்கள் என்று இப்பிரதேச மக்கள் சார்பில் எதிர்பார்க்கின்றேன் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் சமூகத்தின் உரிமைகளை வழங்குவதற்காக அன்று இரண்டாவது முறையாக இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், கடந்த ஆண்டு நுவரெலியாவிலும் இதேபோன்ற பேரணி நடத்தப்பட்டதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளராக மதிமேனன் பதவியேற்பு

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேரதலில் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மண்டூர் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விமலநாதன் மதிமேனன் தவிசாளராக அக்கட்சியில் தெரிவு செய்யப்பட்டதையடுத்து அது வர்த்தமானியில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று (திட்கட்கிழமை) போரதீவுப் பற்று பிரதேச சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சென்று தனது கடமைகளைப் பொறுப்பேற்று பதவியேற்றுக் கொண்டார். இதன்போது அப்பிரதேச சபையின் பிரதித் தவிசாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன தங்கராசா கயசீலன் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், இரா.சாணக்கியன் மற்றும் க.பிரபு ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டு பதவியேற்றுள்ள தவிசாளரையும், ஏனைய உறுப்பினர்களுக்கும் வாழ்த்து தெரிவித்தனர்.

10 வட்டாரங்களைக் கொண்ட போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் 16 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 8 உறுப்பினர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பிலும், 5 உறுப்பினர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பிலும், 3 உறுப்பினர்கள் தேசிய மக்கள் சார்பிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.







காலைக்கதிர் Kalaikkathir

## இலஞ்சத்தை ஒழிப்பதாகக்கூறி வந்துவிட்டு

# உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியமைக்க ஆளும்தரப்பு முயற்சி

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளின் மேயர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்க்கைச்சுமை சடுதியாக உயர்வடைந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரை மேடைகளில் வாழ்க்கைச் செலவுகள் பற்றி தீவிரமாகப் பேசியது. ஆட்சிக்கு வந்தவுடன் வாழ்க்கைச் செலவுகளை குறைப்பதாக குறிப்பிட்டது. ஆனால் இதுவரையில் வாழ்க்கைச்செலவுகள் குறைக்கப்படவில்லை.

மக்களின் அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காணும் எவ்வித திட்டங்களையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை. நிறைவடைந்துள்ள 6 மாத காலத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் விருத்திக்கான நடைமுறைக்கு சாத்தியமான புதிய கருத்திட்டங்கள் ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் எவ்வாறு நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு பொய் மற்றும் வெறுப்பினை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. ஆளும்தரப்பின் உண்மை தன்மையை மக்கள் ஆறு மாத காலத்துக்குள் விளங்கிக் கொண்டார்கள். இதனால் ஆளும்தரப்பு 23 இலட்சம் வாக்குகளை இழந்தது. இதனால்தான் ஆளும்தரப்பு உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் அமோக வெற்றிப்பெறவில்லை.

கொழும்பு மாநகர சபையில் யார் ஆட்சி அமைப்பது என்பது இழுபறி நிலையில் உள்ளது. ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோரியது. ஆனால் ஆட்சி அமைப்பதற்கான சிறந்த திட்டங்களை முன்வைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் முன்மொழியும் மேயர் வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை என்றார்.

## வரிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதியோ அல்லது அரச அதிகாரியோ இவ்வாறான செயலில் ஈடுபட்டால், தரம் பாராமல் அதிகபட்ச தண்டனை வழங்க தலையிடுவேன் எனவும் தெரிவித்த அரசுத் தலைவர் , மக்கள் செலுத்தும் வரிகளுக்கு நியாயம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, அதற்கு எதிராக செயல்படும் கருப்புப் பொறிமுறையை முற்றிலுமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற வரி இணக்கம் மற்றும் வரி அடிப்படையை மேம்படுத்தும் தேசியவேலைத்திட்டமான 'வரிசக்தி' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்

உங்கள் வரிப் பணம் உங்களுக்காக' - என்ற தொனிப்பொருளின் கீழ் 'வரி சக்தி - தேசிய வரி வாரம்' ஆரம்பித்தல் இதற்கு இணைந்தவகையில் நடைபெற்றது.

தற்போதைய ஆளும்தரப்பு ஸ்தம்பிதமடைந்த ஒரு நாட்டைக் பொறுப்பேற்றதாகவும், நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வரி பொறிமுறையை நெறிப்படுத்த வேண்டும் என்றும் அரசுத் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாடாக நாம் தகுதிகாண் காலத்தில் இருக்கிறோம்என்றுதெரிவித்தஅரசுத்தலைவர் ,சர்வதேசநாணயநிதியத்துடனானநீடிக்கப்பட்ட கடன் உடன்படிக்கையை இந்நாட்டின் அவ்வாறான இறுதி வேலைத்திட்டமாக மாற்றுவதன் மூலம் நமக்கே உரிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சகல மக்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

வரி செலுத்துவதில் மக்களின் அவநம்பிக்கையான மனப்பான்மையை நம்பிக்கையான மனப்பான்மையாக மாற்றவும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்என்றபுதியவரிக்கலாசாரத்தை உருவாக்கும் நோக்கத்துடன் வரி சக்தி தேசிய வரி வாரம் செயல்படுத்தப்படுகிறது.

இன்று முதல் எதிர்வரும் 07 ஆம் திகதி வரையான வாரத்தில், வரிசெலுத்துதல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு வரிப்பணம் எவ்வாறு பங்களிக்கிறது என்பதுடன் மக்களுக்கான நன்மைகள் தொடர்பிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

2024 ஆம் ஆண்டிற்கான தனிநபர் வருமானவரிஅறிக்கையைசமர்ப்பிப்பதற்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத் தளத்தின் திறப்பு விழாவும் இங்கு நடைபெற்றதுடன், 2024ஃ25 மதிப்பீட்டு ஆண்டிற்கான முதல் வரி வருமானமாக அரசுத் தலைவர் , தனது தனிநபர் வருமான வரி அறிக்கையை இணையத் தளத்தில் பதிவேற்றார்.

மேலும், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் யுளுலுர்ருஊ முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஜெர்மன் அரசு மற்றும் ருஹிஊவுயுனு ஆகியவற்றின் ஆதரவுடன் நவீனமயமாக்கப்பட்ட இந்தக் கட்டமைப்பின்மூலம்,இறக்குமதியாளர்களுக்கு பொருட்கள் நாட்டிற்கு வருவதற்கு முன்பு வரி செயற்பாடுகளை முடிக்க வாய்ப்பு வழங்கப்படுவதுடன், அதன் மூலமாக, சுங்கத்தால் செயல்படுத்தப்படும் அபாயங்கள் முகாமைத்துவம் மென்பொருள் மூலமாகவும், அபாயங்கள் அற்ற கொள்கலனை கப்பலில் இருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட இறக்குமதியாளர்களின் களஞ்சியசாலைகளுக்கு கொண்டு செல்ல வசதிகளை ஏற்படுத்தும். சட்டப்பூர்வமாக உற்பத்திசெய்யப்படும்மதுபானபோத்தல்களை பாதுகாப்பு அடையாள முறையின் ஊடாக அடையாளம்காணும்தொலைபேசிசெயலியை மதுவரி அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

அரசுத் தலைவர் யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் இங்கு உரையாற்றியதுடன், வர்த்தக சமூகம் மற்றும் மக்களின் வரி செலுத்தும் இணக்கத்தை மேம்படுத்திவரிஅடிப்படையை வலுப்படுத்துவதேவரிவாரத்தின்நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன கருத்துத் தெரிவிக்கும்போது, வரி செலுத்துவது நாட்டிற்கு நல்லெண்ணத்தில் செய்யப்படும்முதலீடாகும்என்றுதெரிவித்தார்.

'ஊடநயஜ ளுசஷ் டுயமெய' நிகழ்ச்சித் திட்டத்தின் அழைப்பாளர் அரசுத் தலைவர் யின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரசல் அபோன்சு, இங்கு கருத்துத் தெரிவிக்கையில், வரிசெலுத்துவதன்மூலம்கட்டியெழுப்பப்படும் சுபீட்சம் நெறிமுறை சார்ந்த அபிவிருத்தியுடன் கூடியநாட்டிற்கு இன்றியமையாதவிடயமாகும் என்றும் தெரிவித்தார்.

## மருந்துத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பிய போதிலும், அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இந்த பிரச்சினைக்கான தீர்வினையும் ஆளும்தரப்பு முன்வைக்கவில்லை.

எல்.பி. 8.1எனப்படும் கொவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற்போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹொங்கொங்கில் பரவி வருகின்றது. இந்த துணை வகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்த வித பரிசோதனைகளும் நடைபெறுவதாக காண முடியவில்லை. இந்ததுணைமாறுபாடுதிரிபுகள் தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மருத்துவமனைகளில் இதனுடன் தொடர்புடைய அறிகுறிகளுடன் இருக்கும் நோயாளர்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். இந்நிலைமையில் தற்போது சின்னம்மை நோயும் அதிகரித்துள்ளது. இந்நோய்க்கு ஆகக் குறைந்தது 6 வாரங்களாவது தொடர்ச்சியாக சிகிச்சையளிக்க வேண்டும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கும் முறையான திட்டமொன்று முன்னெடுக்கப்படவேண்டும்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை, சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றுக்கும் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. இதற்கான வர்த்தமானி அறிவித்தலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏதேனும் தரப்பு தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்ற சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளிற்கான முதல்வர் மற்றும் தவிசாளர் தேர்வு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறும். இதற்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள 34 சபைகளில் 3 சபைகளை தமிழ் அரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையில் வெற்றியீட்டியதன் அடிப்படையில் சுயமாக நிர்வாகத்தை அமைத்துக்கொண்டனர்.

இதேபோன்று எஞ்சிய 31 சபைகளும் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறுவதற்கான திகதி நேர அட்டவனை என்பன வர்த்தமானி அறிவித்தலிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாநகர சபையை தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளிற்கும் திகதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மே 16, 17, 18, 19, 24, 25, 26, 27, 30 ஆகிய திகதிகளில் வடக்கில்உள்ளஏனையசபைகளில்தெரிவுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## லிந்துலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏலத்தின் போது அதிக விலைக்கு ஏலம் கேட்டவருக்குப் பதிலாக, குறைந்த விலைக்கு ஏலம் கேட்டவருக்கு குறித்த ஏலத்தை வழங்கியதன் மூலம் ஆளும்தரப்பிற்கு 2.38 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமைவாக முன்னாள் நகர சபை தலைவர் நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டிருந்தது.

## 161 சபைகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றின. ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 5 இற்கும் குறைவான உள்ளூராட்சிமன்றங்களை பெற்றுக்கொண்டன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உட்பட முன்னிலை அரசியல் கட்சிகள் ஒரு உள்ளூராட்சிமன்றங்களையும் கூட கைப்பற்றவில்லை.

இந்த முடிவுகளின் பிரகாரம் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 161 உள்ளூராட்சிமன்றஅதிகாரசபைகளின்தனித்த பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் இயலுமைகாணப்பட்டது.இதற்கமைவாகஇந்த 161உள்ளூராட்சிமன்றஅதிகாரசபைகளுக்குரிய உறுப்பினர்களின்பெயர்பட்டியலைதேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நேற்று முன்தினம் பிரசுரித்தது.

பிரசுரிக்கப்பட்டவர்த்தமானிஅறிவித்தலின் பிரகாரம் 14 மாநகர சபைகளில் 13 மாநாக சபைகள் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி வசமாகியுள்ளதுடன், அக்கரைப்பற்று மாநகர சபை தேசிய காங்கிரஸ் வசமாகியுள்ளது.12 நகரசபைகளில்11நகரசபைகளைதேசியமக்கள் சக்தி கைப்பற்றியுள்ள நிலையில் மட்டக்களப்பு காத்தான்குடிநகரசபையைஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. அத்துடன் 135 பிரதேச சபைகளில் 127 சபைகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளதுடன், ஏனைய சபைகளை எதிர்க்கட்சிகள் முறையே கைப்பற்றியுள்ளன.

161உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் பெரும்பாலான சபைகளின் பணிகள் நேற்று சுப வேளையில் ஆரம்பமாகின. மேயர், பிரதி மேயர், தலைவர் மற்றும் பிரதி தலைவர் ஆகியோர் பதவி பிரமாணம் செய்துக் கொண்டதன் பின்னர் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

மக்கள்விடுதலைமுன்னணியின்மின்சார சங்கத்தின் தலைவராக செயற்பட்ட ரஞ்சன் ஜயலால் கடுவெல மாநகர சபையின் மேயராக நேற்று பதிவியேற்றுக்கொண்டார்.இதேபோல் கொழும்பு நிர்வாக மாவட்டத்தில் மொறட்டுவ, கல்கிசை,தெஹிவளைஉட்படஏனையநிர்வாக மாவட்டங்களில் உள்ளூராட்சிமன்றங்களின் பணிகள் ஆரம்பமாகின.

## நாடு திரும்பும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துவதைத்தவிர்க்குமாறும்அவர்சகல தரப்பினரிடமும்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்தியாவிலுள்ள அகதி முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பிய 75 வயதுடைய நபரொருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். அதனைத்தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை அவர் குற்றப்புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும்5ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்செயலாளர் சுமந்திரன், இச்சம்பவம் இந்தியாவிலுள்ள முகாம்களிலிருந்துமீளநாடுதிரும்புவதற்காகத் தம்மைப் பதிவு செய்திருக்கும் சுமார் 10,000 இலங்கை அகதிகளை அச்சுறுத்தி, அவர்கள் நாடு திரும்புவதைத் தடுப்பதற்கான ஆளும்தரப்பின் நடவடிக்கையா? எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவம் தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, 'இலங்கைக்குத் திரும்பிய அகதி அந்தஸ்த்தைக்கொண்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டு, குடிவரவுச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் நான் அறிவேன். எமது நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சூழ்நிலைகளால் அக்காலப்பகுதியில் பெரும் புலம்பெயர்வு இடம்பெற்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்'எனக்குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இவ்வாறான நபர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு ஏற்றவாறான தெளிவானதும், நியாயமானதுமான செயன்முறையை உருவாக்குவதற்கும், உரிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளை, அவர்கள் கௌரவத்துடன் நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்கும் தமது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் அருண் ஹேமசந்திர அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தற்போது பதிவாகியுள்ள சம்பவம் சட்டத்தின் பிரகாரமும், மனிதாபிமான அடிப்படையிலும் வெகுவிரைவில் தீர்க்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் சகல தரப்பினரும் இவ்விவகாரத்தைப்பொறுப்புவாய்ந்தமுறையில் அணுகவேண்டும் எனவும், இதனைக் குறுகிய அரசியல் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்துவதைத்தவிர்த்துக்கொள்ளுமாறும் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர வேண்டுகோள்விடுத்துள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பௌசிக்கு எதிரான வழக்கு நவம்பர் 4 விசாரணைக்கு

இடர் முகாமைத்துவ அமைச்சராக பணியாற்றிய காலத்தில், நெதர்லாந்து ஆளும்தரப்பால் நன்கொடையாக வழங்கப்பட்ட சொகுசு ஜீப் வாகனத்தை தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பயன்படுத்தியதன் மூலம், அப்போதைய அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக தீர்ப்பு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை ஆராய்வதற்காக நவம்பர் 4 ஆம் தி கதி அழைக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்னவினால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு இன்று எஸ். துரைராஜா, மேனகா விஜேசுந்தர, சம்பத் அபேகோன் ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனு அழைக்கப்பட்டபோது, பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் பௌசி சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை, மேலும் அவரது பெயர் திறந்த நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டபோதும், அவர் அந்த நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதன்படி, இந்த மனு தொடர்பான அழைப்பாணையை நான்கு வாரங்களுக்குள் பிரதிவாதியான முன்னாள் அமைச்சருக்கு அனுப்பநடவடிக்கைஎடுக்குமாறுநீதிமன்றம் மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டது. இந்த மனுவில், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, அவரது செயலாளராக பணியாற்றிய சித்தி மரீனா மொஹமட் உள்ளிட்ட எட்டு பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு ஆபத்து இடர் முகாமைத்துவ அமைச்சராக பணியாற்றிய காலத்தில், நெதர்லாந்து அரசாங்கத்தால் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு நன்கொடையாக சொகுசு ஜீப் வாகனம் வழங்கப்பட்டதாகவும், பின்னர் அவர் அதை தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பயன்படுத்தியதாகவும் மனுதாரர் தெரிவித்தார்.

பின்னர், அமைச்சின் நிதியில் இருந்து சுமார் ஒரு மில்லியன் ரூபாய் செலவு செய்து அவர் அந்த வாகனத்தை பராமரித்ததாகவும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு தொடர்பாக, முன்னாள் அமைச்சருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தத நிலையில்,அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர், உயர் நீதிமன்றம் 10 ஆண்டுகளுக்கு இடைநிறுத்தப்பட்ட சிறை தண்டனை விதித்ததாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சராக, பௌசி அரசியலமைப்பை பாதுகாப்பதாக உறுதியளித்திருந்த போதிலும், இந்த செயலின் மூலம் அவர் அந்த உறுதிமொழியை மீறியதாகவும், அதன் மூலம் நாட்டு மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக தீர்ப்பு வழங்குமாறு மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் மேலும் கோரியுள்ளார்.

# தேசிய எல்லை முகாமைத்துவ குழு 9 ஆண்டுகளின் பின்னர் கூடியது

சட்ட விரோத இடம்பெயர்வு, எல்லை தாண்டிய மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல், தீவிரவாதிகள், பயங்கரவாதிகளின் நடமாட்டம் மற்றும் சர்வதேச எல்லைகள் வழியாகத் தப்பிச் செல்லும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் சட்டவிரோத நடவடிக்கைகள், போன்ற வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சினால் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆறு வருடங்களின் பின்னர் இலங்கையின் தேசிய எல்லை முகாமைத்துவ குழு அதன் 9ஆவது அமர்வுக்காக கடந்த 30ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் கூடியது. இதன்போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இக்குழுவானது வளர்ந்து வரும் உலகளாவிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு இயக்கவியலுக்கு மத்தியில் இலங்கையின் எல்லைப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. இந்தக் கூட்டம் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாவின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.

முதலில் இலங்கையின் தேசிய எல்லை முகாமைத்துவ குழு பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் ஒருங்கிணைந்த எல்லை முகாமைத்துவ உத்தியின் ஒரு அங்கமாக நிறுவப்பட்டது. இது பத்து வருடங்களுக்கு முன்பு சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு மற்றும் அவுஸ்திரேலியா, கனடா அரசாங்கங்களின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்பட்டதாக்கும்.

இக்குழுவானது தேசிய எல்லைகள் வழியாக எழும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதுடன், குறிப்பாக ஒழுங்கற்ற இடம்பெயர்வு தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது. அதன் ஆரம்பத்திலிருந்து, எட்டு அமர்வுகள் நடத்தப்பட்டு பின்னர் 2021 முதல் ஒரு இடைவெளிக்கு பின் இத்தடவை மீண்டும் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளவில், குறிப்பாக பிராந்தியத்தில் புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரங்களில் மாற்றம் ஏற்பட்டு வரும் சூழலில், கட்டமைக்கப்பட்ட எல்லை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பாதுகாப்பு அமைச்சு இதனை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளியுறவு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, சுங்கத் திணைக்களம், கடற்படை, பொலிஸ் திணைக்களம் மற்றும் கடலோர காவல் படை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் சிரேஷ்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவ் அமர்வின்போது கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு, குறிப்பாக சுற்றுலாத்துறையை மேம்படுத்த மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க, உறுதியான தேசிய பாதுகாப்பின் வகிபாகத்தை வலியுறுத்தினார். எல்லைப் பாதுகாப்பு என்பது தேசிய பாதுகாப்பின் அடிப்படைத் தூண் என்று தெரிவித்த அவர் இத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் பொறுப்புக்கூறலுடன் கூடிய தீவிர ஈடுபாட்டையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த அச்சுறுத்தல்களுக்கு விரைவான மற்றும் ஒருங்கிணைந்த தீர்வுகளுக்கான அவசரத் தேவையை பாதுகாப்புச் செயலாளர் எடுத்துரைத்ததுடன் எல்லைப் பாதுகாப்பு தொடர்பான பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகளுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

# ஆஸி. துணைப் பிரதமர் இன்று இலங்கை வருகை

ஆஸ்திரேலியாவின் துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் (யூஷ்உஜ¯ழிஷ- னிழிஷயிளவி) உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவுஸ்திரேலிய பிரதி பிரதமர், அரசுத் தலைவர் அனுர குமார திசாநாயக்க மற்றும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

அத்துடன் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுடனான இருதரப்பு கலந்துரையாடலிலும் அவர் ஈடுபடவுள்ளார்.

இந்த விஜயமானது இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு துறைசார் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பொறுப்பை நிறைவேற்றினோம்: தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் நியமனம் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பினை பூரணமாக நிறைவேற்றியுள்ளோம். உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் தலையீட்டுடன் 178 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான நியமனங்கள் இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் உள்ளடங்களாக 339 உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளுக்கான வாக்கெடுக்கு 2025.05.06ஆம் திகதியன்று நடைபெற்றது. 339 உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலம் இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகின.

339 உள்ளூராட்சி மன்றங்களில் 161 உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் நியமனத்தில் சிக்கல் காணப்படாத நிலையில் குறித்த உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் மேயர், பிரதி மேயர் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்களை அத்தாட்சிப்படுத்தி 25 நிர்வாக மாவட்டங்களுக்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

14 நகர சபைகள், 12 நகர சபைகள் மற்றும் 135 பிரதேச சபைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 161 உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளுக்கான வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த 161 உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளில் 14 மேயர்களும், 14 பிரதி மேயர்களும், 147 தலைவர்களும், 147 பிரதி தலைவர்களும் உள்ளடங்குகின்றனர்.

பெயர் பட்டியல் மற்றும் பெண் பிரதிநிதிகளின் பெயர் பட்டியலை 2025.05.30ஆம் திகதிக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு பணிக்கப்பட்டது. இதற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியலின் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

ஓர் அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ தனித்த பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளாத நிலையில் 178 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் நியமனங்களில் சிக்கல் நிலை காணப்படுகிறது. இதனால்தான் 161 உள்ளூராட்சி மன்றங்களை மாத்திரம் வரையறுத்து வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் தலையீட்டுடன் 178 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான நியமனங்கள் இடம்பெறும். இந்த நியமனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தலை விடயதானத்துக்கு பொறுப்பான பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் எதிர்வரும் நாட்களில் பிரசுரிப்பார் என்றார்.

# வழக்கு தாக்கல்

ஆளும்தரப்பால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி இலங்கை மின்சார சபையின் பொறியாளர்கள் சங்கம் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனு நீதிபதிகளான ஏ.எச்.எம்.டி. நவாஸ், அர்ஜ¯ன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

# விபுலானந்தரின் சிலையைப் பார்க்க அவரது ஊர் குழந்தைகள் களப்பயணம்

(வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ்வித்தகர்சுவாமிவிபுலானந்த அடிகளாரின்ஊர்க்குழந்தைகள்மட்டுநகர் சென்று அண்மையில் நிறுவப்பட்ட அவரது கருங்கல் சிலையை வணங்கி வழிபட்டனர்.

காரைதீவு விபுலானந்தா மொன்டிசோரி மாணவர்கள் சனிக்கிழமை களப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

மொன்டிசோரி பணிப்பாளர் ஆசிரியர்கள்தலைமையில்பெற்றோர்கள் மாணவர்கள் இப்பயணத்தில் பங்கேற்றனர்.

இவர்கள் மண்டூர் கந்தசுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை சிவலிங்க அரண்மனை,தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ,சுவாமி விபுலானந்த கருங்கல் சிலை, புன்னைச்சோலைகாளியம்மன் ஆலயம், பாசிக்குடா ,ஹப்பி கிட்ஸ் வேர்ல்ட் குழந்தைகள் பூங்கா, முகத்துவாரம் வெளிச்ச வீடு, கொக்குத்தீவு

போன்றஇடங்களுக்குவிஜயம்செய்தனர்.



ஒருநாள் களப் பயணம் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது என பெற்றோர்கள் தெரிவித்தனர்.

# மூதூரில் சில கடைகள் உடைத்து அவற்றில் திருடிய சம்பவம் பதிவு!

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியின் பிரதேச சபைக்கு முன்பு அமைக்கப்பட்டு இருந்த சில கடைகளை உடைத்து அவற்றில் இருந்த பொருள்களை திருடி சென்றிருப்பதாக கடை உரிமையாளர்கள் தெரிகின்றனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றது. இது தொடர்பான மேலதிக விசாரணையை மூதூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

## கண்ணைப் பறிக்கும் நவதள இராஜகோபுரம்

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு - புன்னைச்சோலை

அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள்ஆலயபுனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ் சாந்தி விழா எதிர்வரும் 08 ஆம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.



இங்கே நிருமாணிக்கப் பட்டுள்ள நவதள இராஜ கோபுரம் கண்ணைப் பறிக்கும் வகையில் மிகவும் அழகாக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இங்கே தான் நவதள இராஜகோபுரம் முதல் தடவையாக நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மகா கும்பாபிஷேகத்திற்கான கர்மாரம்பம் நாளை 04.06.2025 (புதன்கிழமை) ஆரம்பமாகும்.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு: 06.06.2025 07.06.2025 ஆம் திகதிகளில் நடைபெறும்.



மகா கும்பாபிஷேகம் - 08.06.2025 ஆம் தேதியன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஆயிரக்கணக்கான அடியார்கள்ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் சென்று பூப்போட்டு உணர்வு பூர்வமாக வழிபட்டு வருகின்றனர் என்பது அம்மனின் சக்திக்கு அத்தாட்சியாகும்.

மகா கும்பாபிஷேகமன்றுலட்சம்அடியார்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# கௌரவிப்பு

(ஷினாஸ்)

நாவிதன்வெளி சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமையாற்றிய முன்னாள் வங்கி முகாமையாளர் மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எம்.முஹம்மட் முபீன் அவர்கள் நேற்று (திங்கட்கிழமை) நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எம்.முஹம்மட் முபீன் அரச சேவையில் நீண்ட காலமாக சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றிய ஒருவராவார். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நாவிதன்வெளி சமூர்த்தி வங்கியில் கடந்த மூன்று ஆண்டுகளாக வங்கி முகாமையாளராக பணியாற்றிய நிலையில், தனது சட்டக் கல்வியை மேற்கொண்டு சட்டத்தரணியாக வெளியேறியிருந்தார்.

இந்நிலையில் தனது சட்டத்தரணி பணியை தொடர்வதற்காக சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் இணைந்து கொண்டதையடுத்து அரசு சேவையில் சமுர்த்தி முகாமையாளராக பணியாற்றிய போது மேற்கொண்ட சேவையை பாராட்டி இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன், உதவி பிரதேச செயலாளர் போ.பிரணவரூபன், கணக்காளர்கள் கே.றிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகரணி கிருபைராஜா, சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ்.சிவம், உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் தமது புதிய சேவையை தொடர இருக்கும் முன்னாள் நாவிதன்வெளி வங்கி முகாமையாளர் எம்.எம்.முஹம்மது முபீன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவு பரிசும் வழங்கி பாராட்டி கௌரவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய மக்கள் சக்தியின் கொள்கை அடிப்படையில் கிராமங்கள் நகரங்களாக மாற்றப்படல் வேண்டும்

## பிரபு எம்.பி. சொல்கிறார்

(சக்திவேல்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் கிராமங்கள் நகரங்களாக மாற்றப்பட வேண்டும். அது போன்று எங்களால் முன்னெடுக்கப்படுகின்ற புதிய திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தி அதற்கான ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதிகளை சரியான முறையில் பயன்படுத்தி அதற்குரிய நன்மைகளையும் அந்த பிரதேச மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுதான் நமது பிரதான நோக்கமாகும்.

என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு குழுக்கூட்டம் நேற்று (திங்கட்கிழமை) வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது. இதன்போது கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்து ஆறுமாதங்கள் கடந்து இருக்கின்ற இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்திற்குரிய முதலாவது அபிவிருத்தி குழு கூட்டம்தான் தற்போது நடைபெறுகின்றது.

இதன்போது இப்பிரதேசத்தில் இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி சக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தீர்க்கமானதீர்மானங்களைநிறைவேற்றிஅபிவிருத்தியில் வெற்றி காணவேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை இக்கூட்டத்தின்வாயிலாகதீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் கிராமங்கள் நகரங்களாக மாற்றப்பட வேண்டும். அது போன்று எங்களால் முன்னெடுக்கப்படுகின்ற புதிய திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தி அதற்கான ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதிகளை சரியான முறையில் பயன்படுத்தி அதற்குரிய நன்மைகளையும் அந்த பிரதேச மக்களுக்கு பெற்றுக் கொடுத்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் நமது பிரதான நோக்கமாகும்.

இந்த வகையில் பிரதேசத்தில் இருக்கின்ற முக்கியமான பிரச்சனைகள் மாவட்டத்தில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ள வேண்டும். அன்மைக்காலமாக நாம் கிளீன் ஸ்ரீலங்கா எனும் வேலைத்திட்டத்தை முன்நகர்த்திக்கொண்டிருக்கின்றோம். மக்களிடையே சிறந்த பண்புகளை உருவாக்குவது போன்று பிரதேசங்களையும் கிளீன் செய்து துப்புரவு செய்து கிளீன்ஸ்ரீலங்காவேலைத்திட்டத்தின்ஊடாகதன்னை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அது மாத்திரம் இன்றி அரச அதிகாரிகளின் மனங்களிலும் மாற்றங்கள் உருவாக வேண்டும். மக்கள் சேவைகளை தேடி உங்களிடம் நாடும் போது இந்த சேவைகளை செயல் படுத்த வேண்டியது அரசு அதிகாரிகளின் கடமையாகும் அந்த கடமைகளையும் அரசு அதிகாரிகள் சரிவர செயல்படுத்த வேண்டும் அதைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம். அது போன்று புதிய பல விடயங்களையும் இது அரசாங்கத்தின் ஊடாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதற்கும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புக்கள் மிக அவசியமானதாகும் என அவர் இதன்போது தெரிவித்தார்.





இதன்போது கல்வி, சுகாதாரம், விவசாயம், கால்நடை, வன திணைக்களம், உள்ளிட்ட பல விடயதானங்களில் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன், மற்றும் திணைக்களங்களினதும், அதிகார சபைகளினதும் தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# நாவிதன்வெளியில் தமிழ் அரசு கட்சியுடன் சுயேச்சை இணைந்து ஆட்சியமைப்பு

## சுமந்திரன் – ரூபன் சந்திப்பு

( சகாதேவராஜா)



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் நாவிதன்வெளி பிரதேச சபையில் இலங்கை தமிழரசுக் கட்சி உடன் இணைந்து ஆட்சி அமைக்க, அங்கு போட்டியிட்ட சுயேட்சைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம் .ஏ. சுமந்திரன் தலைவர் சி வி கே . சிவஞானம், இரா.சாணக்கியன் உள்ளிட்ட குழுவினருடன் சுயேட்சை குழு தலைவர் கு.புவனரூபன் தலைமையிலான குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தினர் .

இந்தப் பேச்சு சனிக்கிழமை களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

ஆட்சி அமைக்க தாங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ரூபன் இணக்கம் தெரிவித்தார் .

அதன்படி நாவிதன்வெளி பிரதேச சபையின் சபைத் தவிசாளராக இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் உறுப்பினர் இ. ரூபசாந்தன் மற்றும் உபதவிசாளராக சுயேட்சைகுழுவின் தலைவர் கு. புவனரூபன் தெரிவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழு வட்டாரங்கள் உள்ள நாவிதன்வெளி பிரதேச சபையில் 13 பேர் உறுப்பினராக இருப்பர்.

சுயேச்சை அணி போட்டியிட்டு 2125 வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கருத்தரங்கு

(சியாஜ்)



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளை மற்றும் கரைத்தீவு ஜூம்ஆ பள்ளி நிர்வாகமும் இணைந்து நடத்திய மாபெரும் உழ்ஹிய்யா கருத்தரங்கு வெள்ளிக்கிழமை இஷா தொழுகையை தொடர்ந்து கரைத்தீவு ஜூம்ஆ பள்ளியில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் வளவாளராக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் ஜிப்னாஸ் மிஸ்பாஹி கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வுக்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ஸல்மான் இஹ்ஸானி, அஷ்ஷெய்க் ரகீப் ரஷாதி, அஷ்ஷெய்க் ஹஸ்பான் ஸாபிதி மற்றும் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் ரஷாதி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




# அம்பாறை மாவட்ட ஆளும் கட்சி எம்.பிக்களுடன் கிழக்கு மாகாண அதி உயர் அதிகாரிகள் சந்திப்பு

(எஸாகிர்)

கிழக்கு மாகாண சபையின் இவ்வாண்டுக்கான பிஎஸ்ஜிஎஸ் நிதி ஒதுக்கீட்டினை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆளுநர் பங்களாவில் நடைபெற்றது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர், கிழக்கு மாகாண கல்வி, சுகாதார, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற நுங்கு திருவிழா

வவுனியா, மருக்காரம்பளையில் தமிழரின் பாரம்பரிய இசையுடன் நுங்கு திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

இதன்போது, பனை மரத்தின் பயன்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டதுடன், பனை மரத்தின் உற்பத்தி பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதன்போது பனையினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுகள், பனம் பானத்தில் தயாரிக்கப்பட்ட கேக் உள்ளிட்டவையும் பரிமாறப்பட்டன.

மேலும், கலை நிலா கலையகத்தால் இயற்கை உரத்தின் முக்கியத்தை வலியுறுத்தி நாடக ஆற்றுகையும் இடம் பெற்றிருந்தது.

சுயாதீன இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் கிராம சேவகர்கள் பொதுமக்கள் மற்றும் எனப் பெருமளான இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டு நுங்குகளை பருகி மகிழ்ந்ததை அவதானிக்க கூடியதாக





காலைக்கதிர்
Kalaikkathir

# சம்மாந்துறை உபதவிசாளர் அச்சிமொகமட் ஹஜ்ஜின் கடமையின்போது திடீர் உயிரிழப்பு

(சகாதேவராஜா)

புனித ஹஜ் கடமைக்காக மக்காசென்ற சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளரும் சம்மாந்துறை வலய முன்னாள் சமாதான இணைப்பாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான ஆதம்பாவா அச்சிமொகமட்( வயது 65) மதீனாவில் சுகவீனமுற்று நேற்று (திங்கட்கிழமை) திடீரென காலமானார்.

நைகப் என அன்பாக அழைக்கப்பட்ட அவர் தம் மனைவி எம்.ஐ.தஸ்லிமாவுடன் ஹஜ் கடமைக்காக மக்காசென்றிருந்த வேளையில் மதீனாவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவரதுபூதவுடல்அங்கேயே அடக்கம்செய்யப்படும் என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கல்விப் பணியில் 29 வருடகாலம் நிறைபணியாற்றிய சம்மாந்துறை வலய சமாதானக்கல்வி உத்தியோகத்தரான ஆதம்பாவா அச்சிமொகமட் 2020 இல் தனது 60வது வயதில் ஓய்வுபெற்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சம்மாந்துறைத்தொகுதியின் அமைப்பாளரான இவர் சம்மாந்துறை பிரதேசசபையின் உபதவிசாளராக சேவையாற்றியவர். ஜனாப் அச்சிமொகமட் அரசியலுக்கு அப்பால் சமய கலாசார சமுகத்துறைகளிலும் சமுதாயத்தில் பல கௌரவமான பதவிகளை வகித்துவருபவராவார்.

சம்மாந்துறையைச்சேர்ந்த ஆதம்பாவா குழந்தையும்மா தம்பதிகளின் புதல்வரான இவருக்கு 3சகோதரிகளும் 3சகோதரர்களுமுள்ளனர். இவர் எம்.ஐ.தஸ்லிமாவை இல்லறத்தில் இணைத்து 6பிள்ளைகளின் தந்தையாவார்.

இவர் ஆரம்பக்கல்வியை பெண்கள் பாடசாலையிலும் உயர்கல்வியை முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் பயின்று 1992இல் ஆசிரியராக நியமனம்பெற்றார். 2008இல் வலய சமாதானக்கல்வி உத்தியோகத்தராக பதவியுயர்வுபெற்று ஓய்வுபெறும்வரை சிறப்பானபணியாற்றினார். இடையில் இருவருடங்கள் சுனாமி உணவு திட்டத்திலும் மேலதிகபணியாற்றினார்.

இதேவேளை கல்விப்பணிக்கு அப்பால் சமய சமூக அரசியல் துறைகளிலும் தடம்பதித்துள்ளார். அரசியலில் இயல்பாகவே நாட்டம்கொண்ட இவர் 2011இல்உள்ளூராட்சிசபைத்தேர்தலில்போட்டியிட்டு சம்மாந்துறை பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு மக்கள்பணியாற்றினார். இரண்டாவது தடவையும் அவர் தெரிவாகினார்.

இந்நிலையில் 2020ஆம் ஆண்டில் சபையின் உபதவிசாளராகவிருந்த வெ.ஜெயச்சந்திரன் இராஜினாமாச்செய்ததையடுத்து சபையின் உபதவிசாளராக சேவையாற்றிவந்தார்.

சம்மாந்துறைசூரியாபள்ளிவாசல்தலைவராகவும் பொன்னண்வெளிவிவசாயஅமைப்பின்தலைவராகவும் சம்மாந்துறை பொலிஸின் சிவிலபாதுகாப்புக்குழுத் தலைவராகவும் மேலும் பல அமைப்புகளில் பதவிகளை வகித்துவந்த முக்கியஸ்தராவார்.

# கற்பிட்டி அல் ஹிரா பாடசாலை இரு மாணவர்கள் சிதம்பரம் கணித போட்டியில் சாதனை படைப்பு!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

அகில இலங்கைரீதியில் இடம்பெற்ற சிதம்பரம் கணித போட்டியில் கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலை மாணவர்களான தரம் 04 மொஹமட் நஜாத் பாத்திமா நதா மற்றும் தரம் 05 மொஹமட் மில்ஹான் மொஹமட் மிஹ்ரான் ஆகிய இருவரும் வெற்றி பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.எம் நவ்ப் தெரிவித்தார்.




மேலும் இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை ஓர் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தி தமிழ் உறுப்பினராக சம்மாந்துறையில் வினோகாந்த் தெரிவு

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் போட்டியிட்ட பிரபல சமூக செயற்பாட்டாளர் வெள்ளையன் வினோகாந்த் பட்டியலில் ஒரேயொரு தமிழ் உறுப்பினராக தெரிவாகியுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தலில் ஐ.ம.சக்தி சார்பில் இரண்டு உறுப்பினர்கள் பட்டியலில் தெரிவானார்கள்.

இவர்களது பெயர்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான அமைப்பாளரான இவரது அரசியல் வாழ்வில் மக்களால் தெரிவான அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராக தெரிவாகும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.



சம்மாந்துறை பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உடன் இணைந்து ஆட்சியமைக்க ஐக்கிய மக்கள் சக்தி உடன்பட்டிருப்பதால் பெரும்பாலும் உறுப்பினர் வினோகாந்துக்கு உப தவிசாளர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்மாந்துறை பிரதேச சபையில் தெரிவான 23 பேரில் 19 பேர் முஸ்லிம்கள், நால்வர் தமிழர்கள் ஆவர்.

வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் ஏலவே பிரதான வேட்பாளர் வெ.ஜெயச்சந்திரன் தெரிவாகி இருந்தார். தற்போது பட்டியல் உறுப்பினராக அதே வட்டாரத்தில் வெ.வினோகாந்த் தெரிவாகி இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவர் கடந்த 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலும் இவர் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகள்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை, பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியின் 40 ஆண்டு கால வரலாற்றில் முதற் தடவையாக இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளருமான எம்.ஏ. அஷ்ரப் தாஹிர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றியீட்டிய இல்லங்களுக்கும், வீரர்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்திருந்தார்.





இதன்போது கல்லூரியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான எச்.எல். பஷீர் (ஷர்க்கி), பணிப்பாளர் சபையின் தலைவர் அஷ்ஷேய்ஹ் எம்.எச்.எம். இத்ரீஸ் (ஸஹ்வி), கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஆர். றமீன் (மதனி) மற்றும் ஏனைய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2025இல் வெளியிடப்பெற்றது